சுண்டுக்குளி கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 | ஐப்பசி 3 | ஸபர் 4 | இதழ் 251
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 19-10-1985

### அடைவு வைத்தோர் சங்கம் — யாழ்.செயலகம் முன்பாக மறியல் போராட்டம்

(சுண்டுக்குளி) நேற்றுக்காலை 6-30 மணி தொடக்கம் யாழ். செயலகத்தில் அடகு வைத்தோர் சங்கத்தினர் சுமார் 100க்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் மறியல் போராட்டம் நடாத்தினர்.

(12ம் பக்கம் பார்க்க)

### விஞ்ஞானபீட மாணவர் போராட்டம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்) யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் கடந்த இரு நாட்களாக நடாத்தி வந்த மறியல் போராட்டம் பற்றி இன்று சனிக்கிழமை உபவேந்தர் ஆலோசனைக் கூட்

(11ம் பக்கம் பார்க்க)

## ● வடபகுதியில் இரண்டாவது ஆலயக் கொள்ளை

# வண்ணை பெருமாள் கோவிலில் பல லட்சம் ரூபா சூறை!

### பட்டிருப்பு தொகுதியில் 40 இளைஞர் கைது

(மட்டக்களப்பு) பட்டிருப்பு தொகுதியில் உள்ள சந்தாமலை என்னுமிடத்தில் பொலிஸ் அதிரடிப்படையினர் நேற்று 40 இளைஞர்களை

(11-ம் பக்கம் பார்க்க)

## 50 துப்பாக்கி இளைஞர்களின் நள்ளிரவு திகில்வேட்டை

(ஐ. சண்முகலிங்கம்)

பெருமாள் கோயில் என வழங்கும் யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் நேற்றுமுன்தினமிரவு மிகப்பெரிய கொள்ளை இடம்பெற்றுள்ளது.

வடபகுதி இந்து ஆலயத்தில் இடம்பெற்ற இரண்டாவது கொள்ளை இதுவாகும். சில மாதங்களின் முன்னர் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலில் பல லட்சம் ரூபா ரொக்கமும் தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு பெருமாள் கோவிலில் இடம்பெற்ற கொள்ளையில் ரொக்கப்பணம் ஒரு லட்சம் ரூபாவும், 200 ஆண்டுப் பழமையான நகைகள் உட்பட நாலரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் மற்றும் வெள்ளிப்பாத்திரங்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

துப்பாக்கி முனையில் இனந்தெரியாத இளைஞர்கள் இந்தக் கொள்ளை நாடகத்தை நடத்தினர்.

(11ம் பக்கம் பார்க்க)

### மல்லாகத்தில் வாகன விபத்து: சிறுவன் பலி; மற்றொருவர் காயம்

(யாழ்ப்பாணம்) மல்லாகத்தில் நேற்று நடந்த வாகன விபத்தில் 6 வயது சிறுவன் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். அப்பகுதி மக்கள் அந்த வாகனத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

மல்லாகம் காளிகோவிலடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுதர்சன் என்ற 6 வயது சிறுவன், பாலர்பாடசாலையிலிருந்து வீடு சென்றுகொண்டிருந்தபோது, விசாலாட்சி வித்தியாசாலைக்கருகில், காங்கேசன்துறை நோக்கி வான்

(11ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் நேற்று 2 விநாடிகள் பூமி அதிர்ச்சி

(மட்டக்களப்பு) மட்டக்களப்பில் நேற்று அதிகாலை 5 மணிக்கு, ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால், வீடுகள் அதிர்ந்தன.

சுமார் இரு விநாடி நீடித்த இப்பூமியதிர்ச்சியின்போது பெரிய இடியோசை போன்ற சத்தம் கேட்டதாகவும் வீடுகள் அதிர்ந்ததாகவும், இதனால் மக்கள் அதிர்ச்சியுற்றதாக கூறப்படுகிறது.

இச்சமயம், காத்தான்குடியில் ஒரு பெண்மணி திடீரென மரணமானாரென்றும் பலர் அதிர்ச்சியடைந்ததாகவும் கூறப்படுகிறது. (வ)

### கொள்ளைகளுக்கு எதிராக சாவச்சேரியில் மாணவர்கள் மறியல்!

(யாழ்ப்பாணம்) சாவகச்சேரி பகுதியில் நடந்த கொள்ளைகளை ஆட்சேபித்து நேற்று சாவகச்சேரியில் பொதுமக்கள் வழிமறிப்பு போராட்டம் நடைபெற்றதால், வாகனங்கள் வேறு

(12-ம் பக்கம் பார்க்க)

### கொள்ளைகளுக்கு எதிராக 'புளொட்' ஆயுதரீதியில் செயல்படுமாம்

(யாழ்ப்பாணம்) "யாழ் குடாநாட்டில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவங்கள்மேலும் தொடரும்பட்சத்தில் பொறுப்புணர்வுள்ள வேறு இயக்கங்கள் இதனைக் கவனிக்காதுவிட்டால் தமது இயக்கம் ஆயுதரீதியில் செயற்படும் நிலைக்குத் தள்ளப்படும்" என்று 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்' (புளட்) விடுத்துள்ள பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இன்று ஸ்ரீலங்கா அரசு யுத்த நிறுத்தம், அதற்கான கண்காணிப்புக் குழு என்று பலவாறாகக் கூறிக்கொண்டும், அதை நோக்கிச் செயற்படுவதாக உலக நாடுகளுக்குக் காட்டிக்கொண்டும் இருக்கின்ற அதேவேளை தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் தன்னுடைய பயங்கரவாத நடவடிக்கைகளை மறைமுகமாகவும், சில இடங்

(11-ம் பக்கம் பார்க்க)

### ஊர்காவல்படையை என்னால் கட்டுப்படுத்தமுடியாது

#### திருமலை இணைப்பதிகாரி கூறுகிறார்

(கொழும்பு) ஊர்காவல் படையினரை அரசாங்கம் நியமித்தது அவர்களை என்னால் கட்டுப்படுத்த முடியாது. நான் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ஊர்காவல் படையினரைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்கின்றேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

### மட்டுநகர் கச்சேரியில் 75,000 ரூபா கொள்ளை!

(கொழும்பு) மட்டக்களப்புக் கச்சேரியில் நேற்று பிற்பகல் இனந்தெரியாத இளைஞர்களினால் துப்பாக்கி முனையில் 75,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 4-30 மணி

(11-ம் பக்கம் பார்க்க)



போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் முதலாவது கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். படத்தின் வலதுபுறத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி காணப்படுகிறார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பிரசவ புகையிரத நிலையத்திற்கருகாமையில் கார்த்திகேசர் வீதியில் வீடு கட்டக்கூடிய இளம் தென்னம்பிள்ளைகள் அடங்கிய 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: நாகலிங்கம் வேலுப்பிள்ளை, ஆசிரியர், பெரியமாவடி, சாவகச்சேரி. 1268

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் கிராமசபை ஒழுங்கை முன்பாக கிணறு, மின்சார வசதியுடன் 4½ பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நடராசா, சித்தியார் வளவு, கந்தரோடை, சுன்னாகம் 1275

அச்சுவேலி தெற்கில், ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் ரோட்டோரமாக வீடு கட்ட உகந்த எட்டு (8) பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. மகேசன், 286, நாவலர் வீதி (கைலாசபிள்ளையார் கோவிலடி), யாழ்ப்பாணம். (1226)

கோப்பாய் தெற்கு, விதானையார் ஒழுங்கை, கந்தவேள் வித்தியாசாலைக்கு அருகாமையில் 7 பரப்புக் காணி வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்றவகையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- மகாவளவு, கோப்பாய் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞாயிறு தவிர்ந்த நாட்களில் காலை 8-30—1-00 மணிவரை சந்திக்கலாம். 1252

### சேவை

G. C, E (O/L) கணிதம் அனுபவமுடைய Graduate ஆல் படிப்பிக்கப்படுகின்றது கட்டணம் இல்லை. சேவையாகவே கற்பிக்கப்படுகின்றது அரியாலை, புங்கன்குளத்தில் விபுலானந்தர் வீதியில், 55ஆம் இலக்க வீட்டில் விசாரிக்கவும். 1253

## வகுப்புகள்

தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்து ஆங்கிலம், கணக்கியல் S.T.C.A., மகளிர் தொழிற்கல்வி நிலையம் (1977ல் நிறுவப்பட்டது; அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. லண்டன் பிற்மன் பரீட்சைகள் நடைபெறும் நிலையம்). 37 (149), சிவன் பண்ணை வீதி (யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றிற்கு அண்மையில்), யாழ்ப்பாணம். 1313

A/L 86, 87. கலை, வர்த்தக விஞ்ஞானம், தட்டச்சு, சுருக்கெழுத்து, Spoken English, Book Keeping ஆரம்பம்- 23-10-85 பிறிலியன் அக்கடமி (1) நெல்லியடியில் QC. மகாத்மா வீதி. (2 பிரதான வீதி, பருத்தித்துறை 1294

றேடியோ டேப்றெக்கோடர், டெலிவிசன், டெக் ஆகியவற்றுக்கான பாடங்கள் தபால் மூலம் கற்பிக்கப்படும். அத்துடன் இவை திருத்தியும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: வி. நித்தியானந்தன் கல்வளை, சண்டிலிப்பாய். 1240

## காணவில்லை

கொக்குதொடுவாயைச் சேர்ந்த தம்பையா இராசம்மா என்பவரின் இல. 516903074Z அடையாள அட்டை கிழவி தோட்டத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆ. கோபால், தெடுத்தனை, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 1306

## விற்பனைக்கு

"சுதுமலை" உயதபால் அலுவலகத்திற்கு அருகாமையில் நாவடி மானிப்பாய் வீதியில் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஞா. தங்கராஜா சுதுமலை மத்தி, மானிப்பாய்; தொடர்பு கொள்ளவும்; 1229

திருநெல்வேலி நாவலடி லேனில் 2½ பரப்புடன் கிணறு உட்பட சகல வசதிகளும் பொருந்திய சிறிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. அரியரட்ணம், 138/3, ரெம்பிள் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1293

வித்தனை ஒழுங்கையில் 2 பரப்பில் அமைந்த 4 படுக்கை அறைகள், குளியல் அறை ஆகியவற்றுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு; தொடர்பு: S. சிவானந்தன், வித்தனை ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 1280

வலம்புரிசங்கு- இல்லங்களில் இலட்சுமீகரம் நிலவுவதற்கும், அலைங்களின் பாவனைக்கும் உகந்தவலம்புரிசங்கு உடன் விற்பனைக்குண்டு. தாள் மாணவர் அறப்பணி மனை, 59, மீனாட்சி அம்மன் வீதி (பண்ணை), யாழ்ப்பாணம். 1305

9 Sri Volkswagon 1300 For Sale. மிகவும் நல்ல நிலையிலுள்ள 9 ஸ்ரீ வோக்ஸ்வகன் 1300 கார் விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 1311, C/o 'ஈழநாடு' லிமிட், யாழ்ப்பாணம் அல்லது தொலைபேசி இல: 22127 (1311)

## சேவை

பனம் விதை இலவசம் கிளிநொச்சி குடியேற்றப்பகுதிகளில் 25-10-85 வெள்ளிக்கிழமை பனம் விதைகள் விதைக்க உள்ளோம். தேவையானோர் உடன் விண்ணப்பம் செய்யவும். மிக்கைமை நிறுவனம், யாழ்ப்பாணம். 1307

## தவறிவிட்டது

இல: 660770119V பூபாலசிங்கம் ராஜ்குமாருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், நேரிலோ அல்லது கடித மூலம் அனுப்பி வைக்கவும்: சன்மானம் வழங்கப்படும்: 29, புங்கன்குள வீதி, கொழும்புத்துறை. யாழ்ப்பாணம். 1310

இல: 641752282V க. சிவராசா, சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர் வடக்கு என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1302

## தேவை

தேயிலை அடைப்பதற்கு (பக்கிங்) அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்: தொடர்பு: V. அரியரெட்ணம், 138/3 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1292

சிங்கப்பூரில் கௌரவமான குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் தேவை. N. சண்முகராசா, R. G. கட்டிடம், 70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1274

### WANTED

Situation Vacant-Temporary Cashier cum Clerk/Typist (Female) required for North Ceylon Institute of Data Processing and Financial Management Call Personally Sunday 9-12 Ponniah Lane, Annaicottai. 1315

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற புங்குடுதீவு. புங்குடுதீவு கிழக்கு 12 ம் வட்டாரத்தில் வசித்த நிர்மலா நடேசனின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

சாலஞ்சென்றவர்;

வழ. இல: தத்துவம்/105

தம்பிராசா நடேசன், வறுத்தலைவிளான் தெல்லிப்பழை, தற்போது 12ம் வட்டாரம், புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு.

மனுதார்;

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**க. பொன்னம்பலம்,**
பதிவாளர்.

வரைந்தது:

**ப. கதிரவேலு.**
மனுதாரின் சட்டத்தரணி. 1279




# கேள்விப் பத்திர அறிவித்தல்

## கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் யாழ்ப்பாணம், கல்வித் திணைக்கள கேள்விச் சபையினரால் 1985-ம் ஆண்டு நொவெம்பர் 13-ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகளுக்கும் எதிரேயுள்ள தொகை மதிப்பு நிலையம் அல்லது அதனிலும் கூடிய தொகை மதிப்பு நிலையம் கட்டிட வேலைகளைச் செய்வதற்கென கல்வி அமைச்சில், கட்டிட வேலைத் திணைக்களத்தில், நீர்ப்பாசனத் திணைக்களத்தில், கட்டிடத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1985-ம் ஆண்டு நொவம்பர் 06-ம் திகதி முற்பகல் 10-00 மணிவரையும் கேள்விப பத்திரங்கள் வழங்கப்படும். வைப்புப் பணமாக ரூபா 125/- செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் உள்ள பாடசாலைக் கட்டிட பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்;

**ம. சிமியாம்பிள்ளை,**
யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர்.

| பாடசாலையின் பெயர் | விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| (1) யா/உடுப்பிடி மகளிர் கல்லூரி | மேல்மாடிக் கட்டிடம் படிவம் 11 48' 9'' 25' 0'' | 2,00,000/- |
| (2) யா/விடத்தல்பளை கமலாசினி வித். | பாடசாலைக் கட்டிடம் 60' 0'' 20' 0'' | 1,75,000/- |
| (3) யா/வரணி இடைக்குறிச்சி அ. த. க. பா: | பாடசாலைக் கட்டிடம் 60' 0'' 20' 0'' | 1,75,000/- |
| (4) யா/எழுதுமட்டு வாள் கணேச வித்: | பாடசாலைக் கட்டிடம் 60' 0'' 20' 0'' | 1,75,000/- |
| (5) யா/வட இந்து மகளிர் கல்லூரி | மேல் மாடிக்கட்டிடம் படிவம் 1 130' 0'' 25' 0'' | 5,00,000/- |

(1309)


ARE YOU AN ACCOUNTANT?
IF NOT DON'T YOU THINK
IT'S SHAME!

Our assistance for you to be an Accountant

- INSTITUTE OF COST AND MANAGEMENT ACCOUNTANTS - LONDON
- INSTITUTE OF CHARTERD INTER/PRELIM. ACCOUNTANTS (SRI LANKA)
- ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS- LONDON
- INSTITUTE OF CHARTERED SECRETARIES AND ADMINISTRATORS- LONDON
- INSTITUTE OF ADMINISTRATIVE ACCOUNTANTS- LONDON
- INSTITUTE OF ASSOCIATE BOOK KEEPERS- LONDON
- INSTITUTE OF BANKING- LONDON (SPECIALY FOR BANKERS)

Enrol early.

Our Service always belong to you.

CONTACT:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.
TELEPHONE: 24355

# ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகருக்கு மரணதண்டனை!

## நிறுத்தும்படி காமன்வெல்த் அமைப்பு தென்னாபிரிக்க அரசிடம் வேண்டுகோள்!!

(பிறிட்டோரியா)

தென்னாபிரிக்கக் கறுப்பினத்தவரின் விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கிய பிரமுகரான பென்ஜமின் மலோஸிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தண்டனை தென்னாபிரிக்க நேரப்படி நேற்றுக் காலை நிறைவேற்றப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

தென்னாபிரிக்கக் கறுப்பினப் பிரமுகரும், நோபல் சமாதானப் பரிசு பெற்றவருமான வண. டெஸ்மண்ட்டுட்டு இத் தண்டனையை வாபஸ்பெறும் படி தென்னாபிரிக்க அதிபர் திரு. போதாவை வேண்டியுள்ளார்.

பஹாமாஸில் கூடியுள்ள பொதுநலவாய அமைப்பும் இத்தண்டனையை ரத்துச்செய்யும்படி தென்னாபிரிக்க அரசைக் கேட்டுள்ளது.

மரண தண்டனைக்குள்ளாகியுள்ள திரு: பென்ஜமின் மலோஸி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் ஒரு முக்கிய பிரமுகராவார். மூன்று வருடங்களுக்கு முன்னர் கறுப்பினத் தென்னாபிரிக்கப் பொலிஸ்காரர் ஒருவரைக் கொலைசெய்தார் என்று இவர் குற்றஞ் சாட்டப்பட்டார். இதனையடுத்து இவர் மீதான விசாரணை முடிவில் இவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

நேற்று திரு பென்ஜமின் மலோஸிக்கு வழங்கப்படவிருந்த மரண தண்டனையை யடுத்துத் தென்னாபிரிக்காவில் கறுப்பினச் சமூகத்தவர் வாழும் பகுதிகளில் பெரும் பதட்டமேற்பட்டது.

பென்ஜமின் வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்திற்கு வெளியே மக்கள் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். (கி)

உலகச் செய்திகள்

## "மேம்படும் சமாதான முயற்சிகளை பயங்கரவாதம் குழப்புகிறது" — றீகன்

வாஷிங்டன், அக்-18

"சமாதான முயற்சிகள் மேம்பட்டுவரும்போது பயங்கரவாதம் அவற்றைச் சீர்குலைக்கின்றது" என்று அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்துள்ளார்:

திரு: றீகன் வாஷிங்டனில் இஸ்ரேலிய பிரதமர் திரு: ஸிமோன் பெரஸைச் சந்தித்து உரையாடினார். இதன் பின் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

வடக்கு — கிழக்கில்— ——

## இராணுவத்தை கட்டுப்படுத்தும் ஈ. தே. வி. மு. கோரிக்கைகள்!

### கண்காணிப்புக்குழுவிடம் கையளிப்பு!!

[சென்னை]

ஈழம் தேசிய விடுதலை முன்னணியினர் பத்து அம்ச கோரிக்கையை சமர்பித்து அவைநடை முறைப்படுத்தப் படுவதைக் கண்காணிப்புக் குழு மேற்பார்வையிட வேண்டுமெனக் கோரியுள்ளது.

அக்கோரிக்கைகள் இலங்கையில் அரசு புதிய முகாம்களை அமைக்காது பார்த்துக்கொள்ளுதல், சென்ற ஜூலைமாதத்திற்குப் பின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்பட்ட முகாம்களை மூடிவிடல். பயங்கரவாதிகளைத் தேடிச் சோதனைகளுக்குச் செல்வதையும், ரோந்து சுற்றுவதையும் நிறுத்திவிடல் என்பன இராணுவ முகாம் அமைப்பதோடும் இராணுவத்தினரது கட்டுப்பாடு சீர்குலைவதோடு தொடர்புபட்ட வற்புறுத்தல்களாகும்.

இக்கோரிக்கைகள் குறித்து கண்காணிப்புக் குழுவினரின்

[5-ம் பக்கம் பார்க்க]

## 'நிலாவெளியில் தொழிலில்லை; மக்கள் உணவின்றி தவிப்பு'

[15]

'நிலாவெளியில் வசதியானவர்கள் பணமுள்ளவர்கள் எல்லோரும் முல்லைத்தீவுக்கு வந்துவிட்டார்கள். தற்போது அங்கு வசதியற்றவர்கள் வறுமையால் வாடித் தவிப்பவர்கள். வயோதிபர்கள் வலது குறைந்தவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள்'

நிலாவெளி நிலைமைபற்றி சமீபத்தில் அங்கிருந்து வந்த எம். பத்திமா மேரியிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் அகதிகள் முகாமில் இவரைச் சந்தித்தேன். இவர் நிலாவெளியைச் சேர்ந்தவர். வயது 28 குடும்பத்தினருடனும் உறவினருடனும் வந்திருந்தார். நிலாவெளியிலிருந்து இம்மாதம் 4ம் தேதி புறப்பட்ட படகில் முல்லைத்தீவு வந்திருந்தார்.

முல்லைத்தீவு தேவாலயத்தில் அகதிகள் தொகை அதிகரித்ததைத் தொடர்ந்து சினிமாத் தியேட்டர்ஒன்றில் அகதி முகாம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அங்கு தாங்கள் தங்கியிருந்ததாகவும் கூறினார்.

"இவ்வளவு நாட்களும் நிலாவெளியில் ஏன் இருந்தார்கள்?

விட்டார்கள். அவர்கள் தோட்டத்தில் வேலை செய்தவர்கள் தொழில் எதுவுமில்லை. வயலிலும் வேலை இல்லை; கடலுக்கும் போகமுடியாது: சரியான கஷ்டம், தமிழ்க் கடைகள் ஒன்றும் இல்லை. சாமான்கள் வாங்கமுடியாது. இதனால் சாப்பாடும் கிடையாது"

'நிலைமை சரியான கஷ்டமா?'

'இன்னும் சிலகாலம் சென்றால் அங்கு பெரும் பஞ்சம் ஏற்படும்; உணவு வகைகள் எதுவுமே இல்லை: எத்தனையோ ஏழை வீடுகளில் பட்டினி; குழந்தைகள் பசி, பசி என்று சில வீடுகளில் துடிதுடிக்கிறார்கள். அந்த நேரம் சில கோஷ்டியினர் வந்து அடிக்கடி பயமுறுத்துகிறார்கள்.

'யாழ்ப்பாணம் வர ஏன் விரும்பினீர்கள்?'

'முல்லைத்தீவு முகாமில் சரியான இட நெருக்கடி தினமும் படகில் அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் யாழ்ப்பாணம் வரமுடிவு செய்தோம்: இங்கு எங்களை நன்றாகப் பார்க்கிறார்கள் இப்படித் தெரிந்திருந்தால் போனமாதமே இங்கு வந்திருப்போம்'

'நிலாவெளியில் யாரும் உதவவில்லையா?

'சாப்பிடக் கஷ்டம் உதவி செய்யுங்கள்' என்று 75 குடும்பங்கள் கையெழுத்திட்டு கிராமசேவகரிடம் மகஜர் ஒன்று கொடுத்தோம்: ஒரு நேரக் கஞ்சியாவது தரும்படி கேட்டோம். எதுவும் நடக்கவில்லை.

'ஒரு தொழிலும் இல்லையா?

'கடல் தொழில் வயல்வேலை தோட்டவேலை; கூலிவேலை எதுவுமே இல்லை; நிலாவெளி உப்பளத்திற்கு பயத்தினால் ஒருத்தரும் வேலைக்குப் போவதில்லை. இதனால் வறுமை ஏற்பட்டுள்ளது'

வறுமை கொடுமையானது; அதனினும் கொடுமை வறுமையில் அகதியாவது. வசதியுள்ளவர்கள் அகதியானால் சொந்த செலவில் வெளியேறிவிடுவார்கள். ஆனால் வறுமையில் தவிப்பவர்கள் அகதியானால் எதுவுமே செய்யமுடியாது. அது மிகக்கொடுமையானது;

(தொடரும்)

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

– கா. யோகநாதன் –

"கையில் காசு இல்லை: காசு உள்ளவர்கள் எல்லாரும் முதலிலே புறப்பட்டுவிட்டார்கள்: படகுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். காசு இல்லை'

'படகுக்கும் காசு வாங்கினார்களா?"

'எங்களிடம் காசு வாங்கவில்லை: சும்மாதான் வந்தோம்"

'தற்போது நிலாவெளியில் இருப்பவர்கள் காசு இல்லாததனால்தான் வரவில்லையா?'

'அங்கு தற்போது இருப்பவர்கள் எல்லோரும் ஏழைகள் செலவுக்குக்கூட காசு இல்லாதவர்கள் என் அப்பா அம்மா அங்கு சாப்பிட வழியில்லாமல் பட்டினி கிடக்கிறார்கள்'

"ஏன் இப்படி நிலைமை வந்தது?"

'பெரும் வணிகர்கள் எல்லாரும் அங்கிருந்து சென்று

பவர்ஸ் உரம்

வெல்லமுடியாதது

ரூபா 2,000/- க்கும் மேல்

ABC

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

### மணிவாக்கு

ஏழைமக்களைவிடத்தாம் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வதற்குத்தான் செல்வந்தர்களின் பணத்தில் பத்தில் ஒன்பது பங்கு செலவாகிறது.

—டால்ஸ்டாய்

# நமது நோக்கு

## அமுதம் நஞ்சாகும் அவலநிலை

தோல்விபோ என்கின்ற என்று துயரமடையும் மக்கள் இம்மாநிலத்தில் இன்று பலராகின்றனர்.

பரம்பரை இடைவெளி பெற்ற புரட்சிக் கருத்தில் உண்மையில்லாமல் இல்லை. இருப்பினும் முதியோர் எல்லோரும் காவோலை' கள் என்றும், குருத்தோலைகளே நாட்டையும், சமூகத்தையும் மீட்க வல்லவரென்றும் கருதுவது நவீனமாகலாம்; நன்மைதரும் புரட்சிக் கருத்தல்ல. இளமை கட்டுப்பாட்டுக்குள் அமைவதாலேயே முதிர்ச்சி அடையும்.

சமூகம் தேங்கிக் கிடக்கும் நிலையில், நாற்றமடிக்கத் தொடங்க, தாளுக்கவே வளக்கி இறைக்கும் செயலே புரட்சி. மக்கள் ஆயத்தம். ஆதரவு இன்றி அது நிச்சயம் தோல்வியடையும்.

கொள்கைகளாலும், கொலைகளாலும் மக்கள் மத்தியில் பீதி ஏற்படுத்துவதை எந்த ஒரு புரட்சிகரமான இயக்கமும் அனுமதிக்காது.

சண்டையில் எதிரியைச் சாடிக் கொலை செய்வது யுத்த தர்மம் என்பதை எவரும் அறிவர் யுத்தமுறையிலே காலம், நேரம், எதிரியின் பலம் போன்ற அடிப்படை அம்சங்களுக்கேற்பப் போர் முறைகளும் மாறுபட்டிருக்கின்றன. தமிழ்ப் போராளிகள் கையாண்டு வரும் போர் முறைகளில் கெரில்லாப் போர் சர்வதேசஅரங்கில் பல இடங்களில் நிகழ்கின்றது.

திறமையும் ஆண்மையும் உயிர்த்தியாகமும் எந்தப் போர் முறையிலும் இன்றியமையாத பண்புகள் நாட்டுப்பற்றுள்ள எவரும் இவற்றைப்போற்றிஉயிர்தறக்கத் தயாராகும் இளைஞர்களைப் போஷிக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள் வழிகாட்டும் பொறுப்பும் உடையவர்கள்.

மறைமுகமாகத் தொடங்கிய ஆயுதப் போர் இன்று அந்தளைய போராட்டமின்றி அரசாங்கம் எந்த ஒரு நியாயமான முடிவுக்கும் முற்படாதென்பதைத் தெளிவாக்கிவிட்டது

ஆனால் போராட்டம் எந்த நேரத்திலும் வெறும் "பயாட்டமாக' முடியுமோவென்ற அச்சமும் மக்களைப் பீடித்திருக்கிறது. இதனைத் தடுத்துபுனரமைக்கும் பொறுப்பு விடுதலை விரும்பிகளையே சாரும்.

கெரில்லா யுத்தம், மக்கள் அனைவரும் பங்கு கொள்ளக் கூடிய யுத்த முறையல்ல! ஆனால் பொது மக்களின் பூரண ஆதரவுடன் அற்புத சாதனைகள் நிகழ்த்த இடமளிக்கும் போர் முறை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எவ்வித போராட்டத்துக்கும் மூலாதாரம்பொது மக்கள் ஆதரவு. இந்த மேடை அட்டகிண்டால் அது இனத்தின் அழிவு என்றே கொள்ள வேண்டும்.

கம்பூச்சியாவை ஆக்கிரமித்த 'பொல்பொற்' ஆட்சி, அந்த இனத்துக்கே அழிவு தேடுவதாகக் கருதப்பட்டது.

இன்று 'பொல்பொற்' என்ற 'கொடுமையின்' பிரதிபிம்பம் எங்கு ஒடி மறைந்ததோ எவரும் அறியார். ஆனால் இனத்துக்கு அழிவு தேடும் தலைவர் அவர் என்றபடியால் ஆட்சியிலிருந்து 'ஒய்வு' அளிக்கப்பட்டு விட்டது.

யுத்த களத்தில் நிகழும் கொலை வேறு. அரசியல் காரணமாக பொதுமக்கள் போற்றும் பெருமக்களைச் சதி மூலம் கொல்வது வேறு. இவ்வித கொலை பெரும் தோல்வியில் முடிவதை நாம் காண்கிறோம்.

அதேபோன்று இன்று யாழ்ப்பாணத்தையும் மற்றும் தமிழ்ப் பிரதேசங்களையும் உருட்டிவரும் அசம்பாவிதங்கள் இன்னொரு இடுக்கண் என்று கொள்ளப்படுகிறது. அராஜகத்தில் மக்கள் தவிப்பது விடுதலை இயக்கங்களுக்கு எவ்வகையிலும் பலமளிக்காது. உயிரைப் பாதுகாப்பது அவர்களின் உடைமையைப் பாதுகாப்பது விடுதலை வீரரின் பெரும் பொறுப்பு. இதில் தவறுவதானால் விடுதலை வேட்கை திசை திருப்புமென்ற அபாயம் இயற்கை.

தமிழ் இளைஞர் தமிழ் மக்களின் செல்வங்கள், அவர்களின் இன்றைய தியாகம் இன்று அல்லற்படும் எங்களுக்கும், வரும் கால சமூகத்துக்கும் நல்வாழ்வை அளிக்குமென்ற உறுதி மக்கள் மனதில் நிரந்தரமாக வேண்டும். இன்று அதிகரிக்கும் கீழ்மைச் செயல்கள் இதற்கு நாசம் விளைவிக்கின்றன.

நாம் வீழ்ச்சிபென்று இன்று கொள்வதெல்லாம், நன்றாய் விசாரித்தால் நீதிக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கை தோன்றவே செய்யும்.

இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகுமென்பதில் தேற்றமடையலாம்.

# சன்மார்க்கசபை பொன்விழா நாளை இறுதி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 50வது ஆண்டுநிறைவுப் பொன்விழா சன்மார்க்க சபை மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

"ஈழகேசரி" பொன்னையா அரங்கில் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் விழா ஆரம்பமானது மாவை ஆதீன மகாராஜ ஸ்ரீ. சு. து. சுஷண்முகநாதக்குருக்கள் மங்களதீபம் ஏற்றி வைத்தார்.

முன்னாள் மாவட்டசபைத் தலைவர் திரு. க. நடராசா சன்மார்க்கசபை ஸ்தாபகர் ஈழகேசரி பொன்னையாவின் பிரதிமைப் படத்துக்கு மாலை அணிந்தார். தனலக்குமி புத்தகசாலை அதிபர் திரு. மு. சபாரெத்தினம் பொன்விழா நூல் பேழையை தீபம்ஏற்றி ஆரம்பித்துவைத்தார். சிவ தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பாராட்டுரை வழங்கினார். யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். சிவலிங்கராசா "சன்மார்க்கசபை பற்றி ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் நினைவுரை நிகழ்த்தினர்.

இன்று சனிக்கிழமை பொன்னுக்குமாரு அரங்கில் காலை ஒன்பது மணிக்கு தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகளை நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள் தீபம் ஏற்றிவைத்து அருளுரை வழங்குவார்.

யாழ். மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் திரு. செ. ஸ்ரீரங்கநாதன் பரிசுகளை வழங்க நினைவுநாள் உரையை திரு. ஆ. மகாதேவா நிகழ்த்துவார்.

மாலை நிகழ்ச்சிகள் 3-30க்கு சுந்தரமூர்த்தி அரங்கில் யாழ் பல்கலைக்கழக தமிழ்பிரிவு திரு. நா. சுப்பிரமணியஐயர் தலைமையில் நடைபெறும்.

'மல்லிகை' திரு. டொமினிக் ஜீவா, கலாநிதி சபா ஜெயராசா, திரு. இதம்பர நிருச் செந்திநாதன் ஆகியோர் 'ஒரு கண்ணோட்டம்' என்ற இலக்கிய உரைகளையும், 'அமுத விழா' நூல் ஆசிரியர்கள் திருமதி கோகிலா மகேந்திரன், புலோலியூர் திரு. ஆ. இரத்தினவேலோன் மற்றும் திரு. சி. வேலமுதன்' திருமதி வள்ளி நாயகி இராமலிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்துவார்கள்.

நாளை 20ந் திகதி ஞாயிறு "அப்பாக்குட்டி அரங்கில்' தலைவர் கலைப்பேரரசு ஏ ரி. பொன்னுத்துரை தலைமையில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு க. வித்தியானந்தன் சிறப்புரை நிகழ்த்துவார் யாழ் பல்கலைக்கழகக் கலைப் பிரிவு, கலாநிதி திரு. சி. மௌனகுரு உரையாற்றுவார். இறுதியில் 'அன்புத்தமனத்தில் விடிவுகள்' நாடகம் இடம்பெறும். (ஐ)

# ம. வங்கிகள் இயங்காததால் கூ. சங்கங்கள் பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக் கிளைகள் தொடர்ந்து திறக்கப்படாமல் இருப்பதால் கூட்டுறவுச்சங்கங்களுக்குப் பெரிய பாதிப்பும் கஷ்டங்களும் ஏற்பட்டு வருகின்றன நகைஅடைவுவைத்தோர் நியாயமான கோரிக்கை நிறைவேற்றுவதில் காலதாமதம் காட்டுவதால் இந்த நிலைமை நீடிக்கிறது.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபை யாழ். பிரதேச தலைவர் திரு. கி. சிவமகாராசா யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது:-

மக்கள் வங்கி தொடர்ந்து பூட்டப்பட்டு இருப்பதினால் கூட்டுறவுச்சங்கங்கள் தங்கள் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றன கூட்டுறவுச் சங்கங்களின் காசோலைகளுக்கு பொருள் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை இது தோற்றுவித்துள்ளமையினால் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்கள், பண்டிகைக்குரிய புடவை வகைகள் என்பனவற்றைஉரிய காலத்தில் பெறமுடியாமல் இருக்கின்றது அத்துடன் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் உரம், கிருமிநாசினி போன்ற பொருட்களை பெறும் விவசாயிகள் அவற்றை பெற முடியாமல் கஷ்டப்படுகின்றனர். மேலும் பயிர்செய்கை கடன் பெற்று விதை இனங்களை கொள்வனவு செய்ய முடியாமலும் கஷ்டப்படுகின்றனர் இக்காரணங்களினால் கால போக விவசாயம் பாதிக்கப்பட்டு உணவுத் தட்டுப்பாட்டினை மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

அது மட்டுமன்றி சம்பளம், ஓய்வூதியம் என்பனவற்றை மக்கள் வங்கிமூலம் பெறுபவர்களும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

இலங்கைவங்கியில் கூட்டுறவுச்சங்கங்கள் கணக்கு கனை திறப்பதினால் மேற்கூறப்பட்ட பிரச்னைகள் தீர்மாட்டாது; ஆகவே அடைவுவைத்தோரின் நியாயமான கோரிக்கைகளை உடன் தீர்த்து மக்கள் வங்கியை நம்பியிருக்கும் கூட்டுறவுச்சங்கங்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக மக்கள் வங்கிகிளைகளை திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

## "சோவியத்நாடு—— பயணக்கட்டுரைகளை எழுதத் தூண்டுகிறது!"

— கலாநிதி கிருஷ்ணராசா

(யாழ்ப்பாணம்)

"சோவியத் நாடு பற்றிய பிரயாணக் கட்டுரைகள் அதிகமாக எழுதப்பட்டுள்ளன. தமிழ் எழுத்தாளர்களும், அறிஞர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் சோவியத்நாடுபற்றிய பிரயாணக் கட்டுரைகளை அதிகம் எழுதியுள்ளனர் காரணம் சோவியத்நாடு புதிய மக்கள் சமுதாயத்தைக் கொண்டது. அங்கு சமூகக் குறைபாடுகள் குறைவு, மக்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. எனவே மக்கள் அந்நாட்டைப்பற்றி அறிய மிகவும் ஆவலாய் உள்ளனர். எனவேதான் எழுத்தாளர்களும் அங்கு சென்றுவந்ததும் பிரயாணக் கட்டுரைகளை எழுதத் தவறுவதில்லை,"

இவ்வாறு சாந்தனின் இரு நூல்கள் வெளியீட்டுவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கலாநிதி சோ. கிருஷ்ணராசா குறிப்பிட்டார்.

கலாநிதி சபாஜெயராசா தலைமையில் யாழ் நகரில் நடைபெற்ற இவ்விழாவில் சாந்தனின் 'ஒளி சிறந்த நாட்டிலே' என்ற சோவியத் பயணக்கட்டுரை நூலும், "ஆரைகள்' குறுநாவலும் வெளியிடப்பட்டு விமர்சிக்கப்பட்டன.

'ஒளி சிறந்த நாட்டினிலே" நூலை விமர்சித்துப் பேசுகையில் கலாநிதி சோ. கிருஷ்ணராசா மேலும் கூறியதாவது:-

நான் ஐந்து வருடங்கள் சோவியத் நாட்டில் வாழ்ந்தேன். அங்கு வாழ்ந்த காலத்தில் ஒரு பிச்சைக்காரரைக்கூட காணமுடியவில்லை. இப்படியாக மேற்கு நாடுகளைவிட எவ்வளவோ முன்னேற்றம் கண்ட சோவியத் நாட்டைப் பற்றித் தமிழ் மக்கள் அறிய வேண்டியது அவசியம். அறிவதற்கும் பின்பற்றுவதற்கும் எவ்வளவோ விஷயங்கள் அங்கு உண்டு. இந்தவகையில் சோவியத் நாட்டுக்குச் சென்று திரும்பிய திரு. சாந்தன் அந்நாட்டில் தான் கண்டவற்றை தமிழர்கள் அறிவதற்காக இப்பிரயாணக்கட்டுரை நூலில் எழுதியுள்ளார். அங்கு சென்ற எவரும் அந்நாட்டைப்பற்றி எழுதாமலிருக்க முடியாது"

கலாநிதி இ. பாலசுந்தரம் கலாநிதி சி. மௌனகுரு திரு மு. புஷ்பராஜன் ஆகியோரும் விமர்சன உரைநிகழ்த்தினர்.

வரவேற்புரையை திரு செம்பியன் செல்வனும் அறிமுக உரையை திரு எஸ் திருச்செல்வமும் நிகழ்த்தினர்கள். (ஐ)

## பல்கலைக்கழக ஆங்கில வகுப்புகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்ப மாணவர்களுக்கென இம்மாதம் 21ம் திகதி ஆரம்பமாகவிருந்த ஆங்கில வகுப்புகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. வகுப்புகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்று கலைப்பீடத் தலைவர் அறிவித்துள்ளார்.

## அகதிமாணவர்க்கு பாட நூல்கள் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில்ஏற்பட்ட அசம்பாவிதங்களேபடுத்து பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு யாழ் நகரிலுள்ள விக்ரு டீயூசன் சென்றர் அதிபர் திரு எப். ஜெயந்தன் அகதி முகாம்களுக்கு சென்று இலவசமாக பாடநூல்களையும் உபகரணங்களையும் வழங்கி வருகிறார்.

அத்துடன் க. பொ. த சாதாரணம், க. பொ த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நலன்கருதி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இலவசமாக புதிய வகுப்புக்களை நடாத்தவும் அதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கல்வி நிறுவனம் அகதிகளுக்கு உணவு, உடை, பால்மா உட்பட தேவையான பல் வேறு பொருட்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)



1961ல் யாழ்ப்பாணக் கச்சேரி முன்பாக சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது சகோதர முஸ்லிம்களுடன் ஈருடல் ஓர் உயிராகி, அவர்கள் மத்தியில் 'தர்மர்' இங்கு வீற்றிருக்கின்றார்.

## உள்ளத்தால் அரசியல்

[I-ம் பக்கத் தொடர்ச்சி]

அரங்கில் கடிய அணிக எடுத்து இயம்பிய பெருமை இவரையே சாரும்.

நாடாளுமன்றத்தில் சிறந்து விளங்கிய அவர் என்றென்றும், மக்களைத் தலைவனாகவே விளங்கினார். மக்களை நேசிப்பதே வாழ்க்கையின் முதற்படி என சொக்கிரசிசர் நெறியைக் கடைப்பிடித்தவர் கருணை வள்ளல் தருமலிங்கம். காலம் செல்லச் செல்ல இவரது முதிர்வு உலக அரங்குகளுக்கும் இவரை எடுத்துச் சென்றது, சமாதான இயக்கத்தின் சார்பில் இவர் பல்கேரியா நாட்டில் நிகழ்த்திய உரை பல மொழிகளில் பிரசுரிக்கப்பட்டன.

'இனவாதக் கட்சியின் அங்கத்தவர் என்று கொள்ளப்பட்ட கட்சியின் அங்கத்தவராகவிருந்தும் இங்கள அறிஞர்கள் ஒரு மனதாய் ஆபிரிக்க ஆசிய விடுதலை இயக்கத்தின் மூத்த அங்கத்தவராக சோவியத் நட்புறவுச் சங்கத்தின் முக்கியஸ்தராக இவருக்கு இடமளித்துக் கௌரவித்தார்கள்.

கொந்தராதேவக் கல்லூரியின் முகாமையாளராக அவர் விளங்கிய காலத்தில் இவர் நாடாளுமன்ற தேர்தலில் பிரவேசித்தார். அக்காலத்தில் அதே பள்ளிக்கூடத்தில் உதவி ஆசிரியராக விளங்கிய வு பொன்னம்பலம் அவர்களும், தேர்தலில் போட்டியிட்டார்கள். இவர் முகாமையாளராக இருந்தபோதிலும் மற்றவர், உதவி ஆசிரியராக இருந்தும் ஒரு விதமான வெறுப்பு மனப்பான்மையுமின்றி தேர்தலில் வெற்றி பெற்று, முன்னையிலும் பார்க்க பொன்னம்பலம் அவர்களோடு சிநேகபூர்வமாக நடந்தார். "பகைவனுக்கும்" அருளும் பண்பாளர் அவர்.

அவரது இல்லம் காமதேனு; இப்பெயருக்கு இணங்க ஏழைகள் துயர்துடைக்கும் இல்லமாக விளங்கிற்று.

அவரது வீட்டில் பணிபுரியும் சின்னத்துரை இராமசுவாமி அவரது குடும்பத்தினரேயாவர்.

சாந்தமே உருவான அவர், அமைதியில் வீரம் கண்டு, இறைமை கண்டு சீற்றம் கொள்பவர். சிறியன சிந்தியாதவர் தன்னிறந்த குடும்பத் தலைவன்; அன்பு கனிந்த தந்தை; நம்பிக்கைக்குரிய நண்பன்.

இவரது ஆளுமை படிப்படியாக ஆத்மீக வளம் கொண்டு விளங்கியது; அன்னை பராசக்தியின் அடிநிழலில், சரண் புகுந்து தனது ஆளுமையை வளம் செய்து கொண்டவர் அவர்.

மனிதகுல மாணிக்கமான அவர் என்றென்றும் வாழ்வார். உலக அன்னையாம் பராசக்தி அவர் பெயரை என்றென்றும் வாழவைக்கத் தேவியை இறைஞ்சுகின்றேன்.

## இன்றைய பலன்

மாதம்:- ஐப்பசி
திகதி:- 3 (19-10-1985)
கிழமை:- சனி
திதி:- ஷஷ்டி
நக்ஷத்திரம்:- மூலம்

மேடம்:- உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணி தீர்வதற்கும் இடமுண்டு.

இடபம்:- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர் உற்சாகம் குன்றும், சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

மிதுனம்:- காதலர்களுக்கு கற்கண்டான தினம், குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்கள் ஆதரவும் பெற்றோர் ஆசியும் தப்பாமல் கிட்டும்.

கடகம்:- எண்ணியதில் தடைகள் தோன்றும், ஏமாற்றம் தாக்கும் நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும், நிதானம் வேண்டும் பொருள் விரயத்துக்கு இடமுண்டு.

சிங்கம்:- நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும் இன்று புண்ணிய விருப்பம் மேவிடும், சுபதினம்.

கன்னி:- தொழில் துறையில் வெற்றி விருந்தினர்கள் வருகை வேடிக்கையாக இருக்கும், இதயப்பூர்வமாகில் இன்பத்தின் மின்னல்.

துலாம்:- இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும்; எதிர்பார்த்த பொருள் கிடைக்கலாம், பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

விருச்சிகம்:- நடையில் தடுக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகி விடும்; உடல் நலம் சிறிது பாதிக்கப்படும்.

தனுசு:- கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் உடல் நலமும் பாதிக்கபடலாம், அவசர போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்:- இதயம் இன்பத்தால் விம்மும், இல்லத்தில் இனிமை தழுவும்; உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு வளரும்.

கும்பம்:- அவசரக்கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்தி தென்படும், சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு.

மீனம்:- அறவழிகளை நாடும் பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருள் செல்வாக்கும் வளரும், சுற்றுடலில் மதிப்பும் உயரும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## இராணுவத்தை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கைகளை அவதானித்த பின்னரே மேற்கொண்டு எடுக்க வேண்டியன பற்றித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் ஈழம் தேசிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

## மேம்படும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சமாதான முயற்சிகள் மேம்படும்போது அவற்றைச் சீர்குலைப்பது பயங்கரவாதத்தின் நோக்கமாக இருந்துவந்திருக்கிறது.

மத்திய கிழக்கு நிலவரம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். இங்கு இஸ்ரேலுடனான சமாதான முயற்சிகளை பி. எல். ஓ. இயக்கம் பயங்கரவாதம்மூலம் தடைசெய்துவருகிறது.

பயங்கரவாதிகளுக்குப் புகலிடமளிக்க மறுப்பது, அவர்களுக்குத் தண்டனை விதிப்பது போன்றவற்றை அமெரிக்கா அதன் பிரதானகொள்கைகளாகக் கொண்டுள்ளது" என்றார்.

இஸ்ரேலியப் பிரதமர் திரு. ஸிமோன்பெரஸ் கூறியதாவது:-

"சமாதான முயற்சிகளை இஸ்ரேல் இருகரம்நீட்டி வரவேற்கிறது. மத்திய கிழக்கு நெருக்கடியில் பி. எல். ஓ. தவிர்ந்த ஜோர்தான், மற்றும் ஏனைய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் தயாராகவுள்ளது.

வாஷிங்டன், அம்மான் அல்லது ஜெருசலத்தில் இஸ்ரேல் அதன் சமாதானப் பேச்சுக்களை நடத்தத் தயாராகவுள்ளது என்றார். (ஐ)

## ஏழை மக்களின்...

[IV-ம் பக்கத் தொடர்ச்சி]

நானும் கள்ளுகம் சந்தை வட்டாரத்தில் போட்டி இட்டு வெற்றி பெற்றேன். கிராமசபை தலைவராக திரு. தர்மலிங்கம் போட்டியிட்டு வெற்றிபெற்றார்கள். தலைவராக வெற்றிபெற்ற திரு தர்மலிங்கம் அவர்கள் தன்னை எதிர்த்து வாக்களித்தவர்களையும் ஆதரித்து வாக்களித்தவர்களையும் ஒரே மாதிரி ஆதரித்து சகல வட்டாரங்களுக்கும் ஒரேமாதிரியான சேவை செய்தார்கள்.

தம்நலம் சிறிதும் இல்லாது பொதுமக்கள் தொண்டே இறைவன் தொண்டு என்ற மேலான தத்துவத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்த தர்மலிங்கம் ஆன்மா இறைவன் சந்நிதானத்தில் என்றும் நிலைத்து வாழ பிரார்த்திப்போம்

## இன்று நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சு. வில்வரத்தினத்தின் "அகங்களும் முகங்களும்" நூல் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நாவலர்துறை ரோ. க. தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

வண. பிதா எஸ். எவ். கிருபானந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் திரு. இ. மௌனகுரு, திரு. ம. மரியதாஸ், திரு. டானியல் அன்ரனி ஆகியோர் நூல் விமர்சனம் செய்வர் அலை இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ள இந் நூல் அறிமுக விழாவில் வெளியீட்டாளர் உரையை திரு. அ. யேசுராசா நிகழ்த்துவார் பலபிரமுகர்கள் சிறப்புப் பிரதிகளை பெறுவார்கள். (ஐ)


## "பரதாலயா"

(இசை, நடன, வாத்தியக் கல்லூரி)
பக்தியுடன் கொண்டாடும்

**2-வது வாணி விழா**

● ★ ● ★ ● ★

விஜயதசமி 23-10-1985

● ★ ● ★ ● ★

பரதநாட்டியம், வீணை, வாய்ப்பாட்டு ஏனைய வாத்தியங்கள் ஆகிய கலை வகுப்புகளுக்கான பிரவேசம் விரும்பும் கலையார்வமுள்ள மாணவ, மாணவியர்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**தி. கனகலிங்கம்,**
அரசடி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (1297)


## 45-வது நாள் நினைவஞ்சலி



அரசியலின் காவலனும்; அன்பின் உறைவிடமாய்
அணையா ஜோதியாய் 30 ஆண்டுகள், சுகம் போகம் அனைத்தையும்
துறந்து, எம்மோடு ஒன்றி நின்றாயே!! எங்கு சென்றாய்!!

**கலங்குகின்றோம்!**

# வே. சி. கணபதிப்பிள்ளை,

ஆலடிச் சந்தி — மானிப்பாய்.

## சந்தை இடமாற்றம்

(ஒட்டுசுட்டான்)

இனிதொச்சியிலிருந்த பிரபமான சந்தை இரணைமடுச் சந்தியிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் முன் பாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இனிநொச்சிச் சந்தைக் கட்டிடங்கள் ஆயுதப்படையினரால் சேதப்படுத்தப்பட்டதைத்தொடர்ந்து மேற்குறிப்பிட்ட இடத்தில் சந்தை அமைக்கப்பட்டுள்ளது.


# LANKA CEMENT LIMITED,

## KANKESANTHURAI

### கற்குழியில் இருந்து கல் நொருக்கி இயந்திரத்திற்கு சுண்ணும்புக் கல் ஏற்றி இறக்குதல்

கீரிமலைக்கருமாவளையில் அமைந்துள்ள எமது கற்குழியில் இருந்து (QUARRY) தொழிற்சாலையில் உள்ள கல் நொருக்கி இயந்திரத்திற்கு (CRUSHER) சுண்ணும்புக் கற்களை ஏற்றி இறக்குவதற்கான "ரிப்பர் லொறிகள், டம்பர்கள்" தேவைப்படுகின்றன;

மேற்படி சேவைக்கு தமது "ரிப்பர் லொறிகள்", "டம்பர்கள்" என்பனவற்றைச் சேவையில் ஈடுபடுத்த விரும்பும் "டம்பர்", "ரிப்பர்" லொறிச் சொந்தக்காரர்களை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் கீழ் வரவேற்கிறோம்.

(1) ஒரு தொன் ஏற்றி இறக்குவதற்கான நியமிக்கப்பட்ட கூலி ரூபா 10/- மட்டும்

(2) "டம்பர்", "ரிப்பர்" லொறிகளுக்கான எரிபொருள், உராய்வு நீக்கிகள் மற்றும் சாரதிக்கான சம்பளம் என்பன ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்பட வேண்டும்.

(3) கற்கள் எமது வரைவு இயந்திரங்களால் "டம்பர்கள்" ரிப்பர்களுக்கு ஏற்றி விடப்படும்.

(4) ஆகக் கூடுதலான ஓட்டத்தூரம் 1½ கிலோமீட்டர்;

மேற்படி நிபந்தனைகட்கு அமைய சேவையாற்ற விரும்பும் ஒப்பந்தக்காரர் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக உதவிப் பொது முகாமையாளர் அவர்களின் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்,

லங்கா சீமெந்து லிமிட்டெட்,

காங்கேசன்துறை.

1887



# பவர்ஸ்

## வீட்டுத் தோட்ட உர வகைகள்




MASTERS ABC 2/83

தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

- இல. 1. தாவர A வர்க்கம்
- இல. 2. தாவர B வர்க்கம்
- இல. 3. பழ மரங்கள்
- இல. 4. கிச்சிலி மரங்கள்
- இல. 5. வாழை, அன்னுசி
- இல. 6. விசேட பப்பாசி
- இல. 7. விசேட உருளைக்கிழங்கு
- இல. 8. விசேட மிளகாய்
- இல. 9. விசேட வெண்காயம்
- இல. 10. மலர் – பொது
- இல. 11. விசேட புற்றரை
- இல. 12. றோசா – செவ்வரத்தம்பூ
- இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
- இல. 14. மலர் – "விசேடம்"
- இல. 15. விசேட வெற்றிலை
- இல. 16. விசேட திராட்சை
- இல. 17. விசேட ஸ்ரோபறி
- இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

2 கி. கி. பொலித்தீன் பக்கெட்டின் விலை ரூபா 9/- மட்டுமே.



# வெளிநாட்டு பிரயாணம்

பாரெய்னில் மேசன், தச்சர், வெல்டர், தொழிலாளர், கட்டட போர்மன்

போன்ற தொழில் பெற்றுச்செல்லும்

பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

## ஷாயி ஷீபாஸ் ஏஜென்சீஸ்

125, கடற்கரை வீதி,

குருநகர், யாழ்ப்பாணம்.

(பழைய பொலிஸ் நிலையம் அருகாமை)

(1814)


உ

# திருமண அழைப்பு

மணமகன்:

## சோமசுந்தரம் சரவணபவநாதன்

மணமகள்:

## ராஜமலர் குமாரசாமி

இடம்:- பழம் றோட்டு பிள்ளையார் கோவில் மண்டபம்

நாள்:- 19-10-85 சனிக்கிழமை

முகூர்த்தம் காலை 10-00 மணி – 12-00மணி

உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் வைபவத்தில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| டாக்டர் சோமசுந்தரம் | டாக்டர் குமாரசாமி |
| மனோன்மணி, | நாகரெத்தினம், |
| "வசந்தம்", | இலக்கம்: 22, |
| கண்டி றோட்" | "ரத்தின வாசா" |
| சாவகச்சேரி; | வண்ணார்பண்ணை. |

(1301)


# Computer Programming

and

# Data Processing Course

(BASIC LANGUAGE)

(6 Months)

Weekend Classes by

Qualified and Experienced Panel of Lecturers

## Commencement:

27-10-85 at 10–00 a. m.

Fees Rs. 1500/-

Ideal for those who seek employment abroad;

## கன்ரேபியா கல்வி நிறுவனம்,

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24201


# 1-வது ஆண்டு நினைவஞ்சலி

## திரு. E. அன்ரனி ஜெரூட்



மலர்வு:

01-05-1952

★

உதிர்வு:

20-10-1984

பிரிவேதும் கூறுமல் இறுதியாக வீட்டை விட்டுப் போகும் போது அனைவரையும் அன்புடன் அழைத்துப்போய் வருகின்றேன் என்றீர்கள். அது உங்கள் இறுதிப் பயணமென்பதை யாமறியவில்லையே: நீங்கள் பிரிந்து சென்றதெங்கே? ஆண்டு ஒன்றாகினும் உங்கள் நினைவு உள்ளத்தில் பல்லாண்டாய் உயிர் வாழும். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் நித்திய இளைப்பாற்றியை வேண்டுகின்றோம்;

உங்கள் பிரிவால் துயருறும்;

அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மாமன்மார், மாமிமார், மைத்துனர்கள்.

இல. 1/1, புதுறோட், செய்மாத்தோட்டம்
யாழ்ப்பாணம்.

1271

அமரர் வி. தர்மலிங்கம் நினைவுச் சிறப்பு மலர் (பொது மக்கள் அன்பளிப்பு)

# உள்ளத்தால் அரசியல் அறம் வளர்த்த வள்ளல் 'தர்மர்'



தமிழீழத் தந்தைமீது பற்றும் பாசமும் அடக்க உணர்வும் கொண்டவர் தர்மர்'. இருவரும் முக மலர்ந்து சம்பாஷிப்பதை இங்கு காணலாம்

ப சந்திரசேகரம்

'உண்மைத்து நேர்மையை உலக உடன்பாட்டுக்காக அர்ப்பணம் செய்தல் கூடாது' "மக்கள் உண்மையென்று தாம் நம்பிக்கை கொள்ளும் எதற்கும் வாழ்க்கையைத் தியாகம் செய்தல் வேண்டும்" என்பன கிரேக்க ஞானி சோக்கிரதீசர் தருகின்ற அமுத வாக்குகளாகும்;

அரசியல் அறம் வளர்க்கும் நெறியாளர்களுக்கெல்லாம், எடுத்துக்காட்டாக நின்று உள்ளத்தால் அரசியலறம் வளர்த்தவர். எனது ஆழ்ந்த அன்புக்கும், உயர்ந்த மதிப்புக்கும் உரிய ஆத்ம நண்பர் தருமலிங்கம் அவர்கள். நீதி வழுவா நெறி நின்ற சோக்கிரதீசர் வாசகங்கள் அவரது தாரக மந்திரமாக விளங்கின இதனடிப்படையில் அவர் வையத்து வாழ்ந்தார்

இளம் பராயம் தொட்டு அவர் கிரேக்க தத்துவத்திலும் சிந்தனையிலும் அளவிலா ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தினால் அவர் வாழ்வு செழுமை பெற்றது.

## தயாள சிந்தை

சுபற்கண்ணி எனும் நாமம் கொண்ட சுந்தரோடைப்பதி கிறிஸ்தவ வரலாற்றுக் காலந்தொட்டு, அரசியல் நெறியும், தமிழ் உணர்வும், சைவசமயத் தத்துவமும், அதே வேளையில் சன்மார்க்கநெறியும் கொண்டு விளங்கிய பதியாகும். இப்பதியின் உள்ளார்ந்த சக்தியினை எடுத்துக்காட்டும் பாரம்பரிய முன்னை குடும்பமே தருமலிங்கம் அவர்கள் பிறந்த குடும்பமாகும்.

வாழ்க்கைக்கு அழகு கருணை என்பதற்கிணங்க இவரது குடும்பமும், தயாள சிந்தை உம் பின்னிப்பிணைந்தவை,

இவரது நேரடி வாழ்க்கை சிறப்புடையது; செவ்வனே மதிப்பிடப் பட வேண்டியது. சமூக சமத்துவம் சமூக சீர்திருத்தம், கூட்டுறவுத்துறை கிராம முன்னேற்றச்சங்கம், உள்ளூர் ஆட்சி மன்றம் ஆகியவற்றில் ஈடுபட்டு தன்னைப் பக்குவப்படுத்தி மக்களின் நன்மதிப்பை அவரது நேர்மையாலும், தன் நல விருப்பாலும் பெற்றுக் கொண்டவர் சமூகத் தொண்டர் தருமலிங்கம்.

## அரசியல் வாழ்வு

இக் காலத்தில்தான் அவரது அரசியற் சித்தாந்தம் கரு எடுத்தது. சமதர்ம தத்துவமே மக்களின் இன்னல்களை கல்வி வறுமையை, பொருளாதாரக் குறைபாட்டை, சமூக தாழ்மையினை அறுக்கும் மருந்து எனச் சிந்தித்து அறிந்தவர், எந்தவொரு அரசியற் கட்சியிலும் சேராது விட்டாலும்சமதர்மத்தையேஅவர்உள்ளம் நாடி நின்றது. பல அரசியல் வாதிகளோடு கலந்துரையாடி இலக்கியங்கள் வாசித்து பொதுவுடைமை ஆளுமையை வளர்த்துக் கொண்டு வந்தார் காலம் செல்லச் செல்ல இவரது சிந்தனைகள் சமதர்ம தத்துவத்தில் உதித்த சிறுபான்மை மக்களின் விடுதலை தேடும் சிந்தனையாக உருவெடுத்தது;

இந் நாட்டுத் தமிழ் மக்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழ வழியின்றித் தவிர்க்கும் வேளையில் மொழி காக்க இனம் காக்க. தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் காக்க, அவர்களின் பாரம்பரியம் சிதைவுறாது பேணிக்காக்க, தமிழரசுக்கட்சி வழிகோல முடியுமெனக் கொண்டார்.

இக்காலகட்டத்தில் தான் இவரது நாடாளுமன்ற வாழ்க்கை ஆரம்பமாயிற்று தொடர்ந்தாற் நூற்றாண்டுக்கு மேல் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பெருமை இவரைச்சாரும்.

தருமலிங்கமவர்களின்நாடாளுமன்ற வாழ்க்கை ஒரு காவியமாகும், இவர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளைப் புரட்டிப் பார்ப்போமானால், தெளிந்த சிந்தனையும், தர்க்கமும் காரண காரியமும் அறிவில் எழுந்த உணர்ச்சியும், இனப்பற்றும், மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் சமரச நோக்கும் செறிந்து காணப்படுவதைக் காணலாம். தனது கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதிநிதியாகவே இவர் காட்சியளித்தார்.

இவரது உரைகள் பொதுவாகப் பொதுவுடைமை நாடுகளின் மேம்பாட்டையும் விசேடமாக சோவியத் ஒன்றியத்தின் அளப்பரிய வளர்ச்சியையும் கொண்டு விளங்கும். அத்தோடு உலகெங்கிலும் அவலக்குரலெழுப்பும் மக்களின் குரலும் செறிந்து இடக்கும் பாலஸ்தீன மக்கள் படும் இன்னல்களை நாடாளுமன்ற

(5ம் பக்கம் பார்க்க)

30 வருடங்களாக
எம்மோடு தோளோடு தோளாய்
நின்று போராடினுயே!!
எங்கு சென்ருய் உன் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகிறேம்.

அமரர்
வி. தர்மலிங்கத்துக்கு
கருணையஞ்சலி
நாகம்ஸ், சுன்னுகம்

# மறக்க முடியாத மாண்பினர்!

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

திரு. வி. தருமலிங்கம் அவர்கள் மறக்க முடியாத மாண்பினர். அவரது மனிதாபிமானச் செம்மையும், மக்கட் சேவையுறுதிப்பாடும் நீண்ட காலம் போற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

தருமலிங்கம் அவர்கள் மாண்புமிக்க ஒரு மனிதர்.

அவரிடத்திருந்த பண்புகளுள் மூன்று முக்கியமானவை யெனக் கருதுகிறேன்.

முதலாவது, அவர் மக்களிடத்து வைத்திருந்த நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை கிராமமட்டத்தில் அவரைக் காட்சிக்கு எளியவராக, மக்கள் மனந்திறந்து உரையாடத்தக்கவராக வைத்திருந்தது; சர்வதேச மட்டத்திலோ அவரை; இந்நம்பிக்கை சமதர்ம நாடுகளின் நண்பனாக சோஷலிஸப் போராட்டங்களின் ஆதரவாளனாக வைத்திருந்தது;

அவரிடத்துக் காணப்பட்ட அடுத்த பெரும் பண்பு, தன்மையான கொள்கைப் பிடிப்பு ஆகும். தருமலிங்கத்தின் கொள்கைப் பிடிப்பு மற்றவர்களை எதிரியாக்கும் ஆக்கிரமிப்பு உணர்வுகொண்டதன்று; அது எதிர்க் கருத்தாரையும் இவரிடத்தே இழுக்கும் தன்மைக் கவர்ச்சி உடையது. இந்தப் பண்பு காரணமாகப் பலர் ஈழத் தமிழர் போராட்டத்தின் அனுதாபிகளாயினர்.

தருமலிங்கம் அவர்களின் மிகச்சிறந்த பண்பு அவரது அறிவு வேட்கையாகும். தான் ஈடுபட்டுள்ள எந்த விடயம் பற்றியும் நிறைய வாசித்தறிந்து அந்தப் பின்னணியிலேயே தனது நிலைப்பாட்டினை வரித்துக் கொள்ளும் பண்பு அவரிடத்திருந்தது;

தருமலிங்கம் அவர்களின் மறைவை ஈடு செய்யமுடியாது; அன்பேயுருவான ஒரு தலைவனை இழந்துள்ள குடும்பத்துக்கு என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் நினைவு நீண்ட நாட்கள் நிலைக்கும்,

30 ஆண்டுகள் அரசியல் வாழ்வில்
சுடரொளியாக இருந்த
அமரர்
தர்மலிங்கத்தின்
ஆத்மா சாந்தியடைய
அனைவரும் பிரார்த்திக்கின்றேம்.

45-வது நாள்
நினைவஞ்சலி

பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள்,
கமநல சேவை நிலையம்,
உடுவில்.

அமரர் தருமர் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றேம்

அருள் குமரன்
பான்ஸி ஸ்ரோர்ஸ்
3, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

சமூகத் தொண்டனும், அரசியல் நேர்மையாளனும், பண்பாளனும்
ஒளிவிட்டுச் சென்ற

அமரர் தர்மலிங்கத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

## மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

---

மின்னுமல் முழங்காமல்
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கு சென்றாய்....

அமரர் தர்மலிங்கத்தின்
ஆத்மா சாந்தியடையட்டும்.

## பாலன் ஸ்ரோர்ஸ்

191, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

---

சிவபதமெய்திய அமரர் வி. தர்மலிங்கத்தின்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

● ★ ●

## வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ்,

நீராவியடி, யாழ்ப்பாணம்

---

தமிழ் மக்களின் காவலனாய்
முப்பது ஆண்டுகள் உழைத்த
உத்தமனே!!காலன் அழைத்
தானே!!! கலங்குகின்றோம்!!
ஆத்மா சாந்தியடையட்டும்!!!

## ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,

மருந்துக்கடை,
பிரதான வீதி, சுன்னாகம்.

---

அமரர் தர்மலிங்கத்தின்
ஆத்மா சாந்தியடையட்டும்.

சகலவிதமான

★ பெயின்ட் வகைகள்
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ கட்டிடப் பொருட்கள்
அனைத்தும்

## அம்பாள் பெயின்ட் ஹவுஸ்

கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.


---

நீண்ட கால அரசியல் வரலாற்றில்
நீங்கா இடம் பெற்றவர்

அமரர் வி. தர்மலிங்கம்

## அன்னாரது ஆத்மா

சாந்தியடையட்டும்




## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

தெல்லிப்பழை.

---

★ தமிழ்மக்களின் தன்னிகரில்லாத் தலைவன்
★ கூட்டுறவின் தந்தை
★ மரணம் நெருங்கும்வரை அயராது பாடுபட்ட மனிதநேயன்

எங்கள் தோழன்
அமரர் வி. தர்மலிங்கத்தின்
ஆத்மா சாந்தியடையட்டும்




## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

சுன்னாகம்.

பொதுசன நூலகம்

# மக்களின் மனங்களில் என்றும் நிலைத்திருக்கும் 'தர்மர்'



பண்பினிற் குன்றம் ஆவான்
பார்க்கெலாம் நண்பன் ஆனான்
அன்பினால் உயர்ந்தான் நல்ல
அரசியல் தர்மம் காத்தான்

என்பையும் பிறர்க்கு நல்கும்
இயல்பினன் நம்மை விட்டே
விண்புக்கான் எனினும் நல்லோர்
விரும்பிடும் தெய்வம் ஆனான்

# நெஞ்சில் நிலைத்திருக்கும் நேர்மை மிகுந்த தலைவர்

மனிதன் இந்த மாநிலத்தில் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது பெரிதன்று. அவன் எப்படி வாழ்ந்தான், என்ன சாதித்தான், என்பது தான் அந்த மனிதனை மக்கள் நெஞ்சிலே நிறுத்தி வைக்கிறது. மனிதத்துவம் சிறிதுசிறிதாக மறைந்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மனிதனை வாழ்ந்து தன்மரணத்தின் பின்பும் பல்வேறு துறைகளிலும் பதித்து வைத்த எங்கள் "தர்மர்" "இப்படித்தான் வாழ வேண்டும்" என்ற இலட்சிய வரையறைக்குள் நின்று வாழ்ந்துகாட்டியவர்.

பொதுவாழ்வில் ஈடுபட்டுத் தான் பொருளீட்ட வேண்டுமென்ற நிலையில்லாத அந்த பணியாளன், பொதுவாழ்வில் ஈடுபட்டதனாலேயே தன்பாரம்பரிய சொத்துக்களைப் படிப்படியாக இழந்தவர்.

'தமிழ் ஈழம்' என்ற எண்ணக்கரு தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைக்கப்பட்டபோது "எப்படிப் பெறுவீர்கள்?" "எல்லை தெரியுமா?" என்றெல்லாம் எள்ளி நகையாடியோர் எண்ணற்றோர். ஆனால் அந்த எண்ணக்கருவுக்கு வடிவு கொடுக்க விவாதக் களங்களைக் கண்டவர் எங்கள் தருமர். சுன்னாகம் சந்தை மைதானத்தில் வாதத் திறன்மிகுந்தவர்களுடன் அவர் நடாத்திய விவாதம் என்றும் அவர் சிந்தனைத்திறனை எம் இதயத்தே பதித்து வைத்திருக்கும்.

அரசியல் நிர்ணய சபைக்கு தமிழரசுக்கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட யாப்பமைப்பு தர்மரின் ஓயா உழைப்பின் வெளிப்பாடு. அவர் சிந்தனைத் தெளிவினைச் சித்தரிக்கும் சிரிய சான்று. அரசியல் அறிவு முதிர்ச்சிக்கான ஆதாரம். இந்திய தேசிய இராணுவம் அமைத்து பாரத சுதந்திரத்துக்கு போராடிய நேதாஜியை நேசித்த காந்தியடிகளைப்போல இனத்தின் விடுதலைக்கு ஆயுதமேந்திய போராளிகளை தர்மர் ஆன்ம சுத்தியுடன் நேசித்தார். என்பது எக்காலத்தும் மறைக்கமுடியா உண்மையாகும்.



1979-ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை பாராளுமன்றக் குழு இந்தியாவுக்கு விஜயம்செய்தபோது பாராளுமன்றத்தில் சபாநாயகர் திரு. கே. எஸ். ஹெக்டேயை 'தர்மர்' இங்கு சந்திக்கிறார்.

1972ம் ஆண்டுக்குப் பின்னர் அன்றைய அரசினால் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சிறிலங்காவின் சிறைக் கூடங்களில் கொடுமைப்படுத்தப்பட்டபோது அவ்விளைஞர் ஒவ்வொருவரதும் இல்லங்களுக்கும் சென்று ஆறுதல் கூறி ஆதரவுகாட்டிய அவரது கனிந்த உள்ளத்தை யார்தான் மறக்கமுடியும்? அந்த காலகட்டத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையின் கவனத்திற்கு இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை கொண்டுவந்தவர் எங்கள் தருமர் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தன் உள்ளத்திற் பட்டதை ஒளிவு மறைவின்றி அஞ்சாமையுடன் கூறும் நேர்மையாளன் அவர். ஒரு சந்தர்ப்பத்தில் "தமிழ் மக்களுக்கு இன்று தேவையானது தம் மனதிற் தோன்றும் கருத்துக்களை அச்சமின்றி வெளிப்படையாகக் கூறும் அடிப்

**சி. சிவமகாராசா**

படை மனித உரிமைதான்" என ஆழ்ந்த கருத்துப் பிரதிபலித்திடக் குறிப்பிட்டார். அந்தப்பெருமகனின் மரணமே அடிப்படை மனித உரிமைகளுக்கு அடிக்கப்பட்ட சாவு மணிதான்.

தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்திற்காகவும் அதன் தூய்மையான கோட்பாடுகளுக்காகவும் உளத் தூய்மையுடன் உழைத்த அந்த உத்தமர் தன் முதுமைவரை தேடிய போது ரோமம் நேசித்த சிசருக்கு நிகராகி நின்றார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## ஏழை மக்களின் பங்காளன்

தான் ஓர் செல்வந்தர், பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை சிறிதும் இல்லாமல் ஏழை எளிய மக்களுடன் இரண்டறக் கலந்து தானும் அவர்களின் பங்காளி என்ற ரீதியில் மிகவும் எளிமையாக வாழ்ந்துகாட்டினார் அமரர் தருமலிங்கம். அவருக்குச் சொந்தமான நிலத்தில் பல ஏழை மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்களிடமிருந்து ஒரு போதும் குத்தகை என்றோ வாடகை என்றோ பணம் அவர் பெற்றது கிடையாது. சமீபத்தில் அந்தக் குடியிருப்பாளர்

### ஆசீர்வாதம் ஹென்றி

களிடம் அவர்களின் விருப்பத்திற்கிணங்கச் சிறு தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் இருந்த நிலங்களை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்தார்கள். அமரர் அவர்களின் இறுதி யாத்திரையின் போது இவ்வாறான மக்களின் கண்ணீர் அஞ்சலி ஆறாகப் பெருகியதைக் கண்டோம்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுந்தரோடை தமிழ் கலவன் உபாத்தியாயர் வித்தியாசாலை ஆகியவற்றின் உரிமையாளராகவும், முகாமையாளராகவும் இருந்து கல்வித் துறையில் மிகவும் பின்தள்ளப்பட்ட ஏழை மாணவர்களுக்குத் தேவைப்பட்டபோது அவர்களுக்குப் பல உதவிகளைப் புரிந்து அவர்களைக் கல்வியில் முன்னேற்றி வைத்தார்கள். துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாகக் குழுத் தலைவராக இருந்து பல அரிய சேவைகளை ஆற்றினார்.

தர்மலிங்கம் அவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதும், கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்த மட்டில் மிகவும் உயர்ந்த கருத்தையே கொண்டிருந்தார்.

அவர் பரந்த நோக்கமும், விரிந்த சிந்தையும் உடையவர். பிறர்மீது பழிவாங்கும் சுபாவமற்றவர். தனக்கு எதிராகப் பிறர்செய்யும் பிழைகளையும் இலகுவிலேயே மன்னிக்கும் சுபாவமுடையவர்.

1961ம் ஆண்டில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஐம்பத்தாறு நாள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தானும் தன் அன்பு மனைவி சரஸ்வதி அவர்களும் தவப்புதல்வன் சித்தார்த்தனும் கலந்து கொண்டார்கள்

1960ம் ஆண்டு உடுவில் கிராமசபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இருபத்திநாலு வட்டாரங்களுக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அப்போது

(5-ம் பக்கம் பார்க்க)


அமரர் வி. தர்மலிங்கத்தின்
45-வது நாள் அஞ்சலி

அரசியலில் தூய்மையாளனாய்,
பண்பின் ஒளிவிளக்காய்,
பல்லாண்டு வாழ்ந்துகாட்டினாயே!!
நீ மறைந்தாலும்; உன்நினைவு
எம்மை வாட்டுகிறதே!!

அங்கத்தவர்கள், நிர்வாகிகள்,
பணியாளர்கள்.

தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக்
கூட்டுறவுச் சங்கம்,

வலி - தென் மேற்கு மானிப்பாய்



சிரிப்பில் எத்தனை அர்த்தங்கள்!!
சிறகொடிந்து நிற்கிறோமோ!!!
உன்துயர் மாறும்நாள் எந்தநாளோ!! பிரார்த்திக்கிறோம்

அமரர் வி.தர்மலிங்கத்திற்கு
45-வது நாள் நினைவு அஞ்சலி

பணிப்பாளர் — பணியாளர்கள்—
அங்கத்தவர்கள்......

தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக்
கூட்டுறவுச் சங்கம்,

கோண்டாவில் — இணுவில்



முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்,
அமரர் வி. தர்மலிங்கத்துக்கு
அஞ்சலி..........

பேக்கரி சொந்தக்காரர்களே
உங்கள் தேவைகளுக்கு எம்மை
நாடுங்கள்

* சகலவிதமான எசென்ஸ் வகைகள்.
* கலர்ப் பவுடர்கள், மாஜரின், கொடிநெய்.

மற்றும் மங்கள வைபவங்களுக்குரிய பொருட்கள்.

எல்லாவகையான தேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.

ஸ்ரீமேகலா ரேடர்ஸ்
9. காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

## வண்ணை பெருமாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினமிரவு ஒரு மணியளவில் லொறி ஒன்றில் வந்த துப்பாக்கி ஏந்திய சுமார் 30 இளைஞர்களைக் கொண்ட கோஷ்டியினர் கோவிலின் சகல பக்கங்களிலும் 'காவல்காத்தாடி நிற்க' கோவில் கதவுகள் திறக்கப்பட்டு இக்கொள்ளை நடந்துள்ளது.

ஆயுதம் தாங்கிய நான்கு நபர்கள் கோவிலுக்கு அண்மையில் பரிபாலகர்களைத் துப்பாக்கி முனையில் அழைத்து வந்தனர் என்றும் அவர்களிடம் இருந்த வெவ்வேறு வகையான திறப்புக்களைப் பாவித்துக் கோவில் கதவுகளைத் திறப்பித்தனர் என்றும் பின்னர் கோவிலுக்குள் புகுந்து கோவிலின் களஞ்சிய அறைக்குப் பரிபாலகர்களை அழைத்துச் சென்று அவர்கள் மூலமாகவே களஞ்சிய அறையையும் திறப்பித்து களஞ்சிய அறையினுள் இருந்த இரும்புப் பெட்டியையும் அவர்களைக் கொண்டே திறப்பித்தனர் என்றும் கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இரும்புப் பெட்டியினுள் ளேயே ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்குரிய இருநூறு காலங்களுக்கு முற்பட்டதும் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கப்பட்டு வந்ததுமான 160 தங்கப் பவுண் நிறையுடைய நகைகள் இருந்தனவாம். இந்நகைகள் இக்காலத்திலே செய்யமுடியாதளவு நுண் கலைத்திறன் வாய்ந்தவை என்று கூறப்படுகிறது.

ஆயுதம் தாங்கிய கொள்ளையர் நாலரை லட்சம் ரூபா பெறுமதியான இந்நகைகளையும் ஒரு லட்சம் ரொக்கப் பணத்தையும் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களையும் எடுத்துச் சென்றனராம்.

ஸ்ரீபெருமாளுக்குரிய ஆடைவகைகள் உள்ள அலுமாரிகளும் கொள்ளையரால் திறக்கப்பட்டு உடைகள் வீசி எறியப்பட்டிருந்தன.

கோவிலின் மூலஸ்தானத்துக்குப் போக எடுத்தமுயற்சி கைவிடப்பட்டதாம். கோவிலினுள் கொள்ளை நடந்தசமயம் வேறு சக கொள்ளையர்கள் ஆயுதங்களுடன் கோவிலின் நான்கு திசைகளிலும் காவல் காத்து நின்றனராம்.

கோவிலின் சத்தம் கேட்டு எழுந்து வந்த இக்கோவிலின் குருக்களும் ஆயுதமுனையில் தடுத்து வைக்கப்பட்டதாகவும் கைக்குண்டு வீசியதால் ஏனைய பொதுமக்களும் இவ்விடம் வரத்துணியவில்லை என்றும். கொள்ளையை முடித்து லொறியில்ஏறி வெங்கடேஸ்வரா வீதியால் கொள்ளையர் செல்லும் போது கொள்ளை அடித்துப் போட்டாங்கள் என்று அவர்கள் சத்தமிட்டவாறு சென்றதாகவும், பொதுமக்கள் தம்மை நெருங்காமலிருக்க ஒன்பது கைக்குண்டுகளை வீசி வெடித்தனர் என்றும் இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கொள்ளை நடந்ததினால் வழமையாக நடைபெறுகின்ற அதிகாலை 'சுப்பிரபாதம்' நேற்று இடம்பெறவில்லை. காலைப் பூசை, 10 மணிப் பூசை, மதியபூசை என்பனவும் நடைபெறவில்லை.

நேற்றுப் பிற்பகல் 1-30 மணியளவில் ஆலயத்தில் பிராயச்சித்த, சண்டாளப் பிரார்த்தனை என்பன நடைபெற்ற பின்பே வழமைபோல பூசைகள் நடைபெற்றன.

இக்கொள்ளை நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்பாக இவ்வாலயத்தின் பரிபாலகர்களில் ஒருவரை இனி தெரியாத நபர்கள் ... கடத்திச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாலயத்தின் நகைகளைக் கொள்ளையடித்தவர் எவராயினும் அவர்கள் அவற்றை ஆலயத்துக்குத் திருப்பி ஒப்படைக்கும்படி ஆலய பரிபாலகர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (ஜ)

## கொள்ளைகளுக்கு எதிராக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் வெளிப்படையாகவும் செயற்படுகின்றது. விடிவை நோக்கி மக்களின் நெஞ்சங்கள் நிறைவேறிட அதி முகாமைகளை இன்று நிறைகின்றன இரத்தமும், கண்ணீரும், வியர்வையுமே எம்மண்ணின் பயிர்கள் காணும் உரமாகிவிட்டன. இந்நிலையில் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போல் மிகக் கேவலமான கொடூரமான கொள்ளைகளுக்கும், கொலைகளுக்கும் நம்மக்கள் அண்மையில் உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

"எமது போராட்டத்தின் வற்றாத ஊற்று எம்மக்களே, எம்மக்களின் நெஞ்சங்களில் கனன்றெழு விடுதலைத் தீயே எமது ஒளிமயமான இலட்சியம் இருளில் வீழ்ந்துவிடாமல் தொடர்ந்து ஒளிபெற்றி உரம் தந்து காப்பாற்றுகின்றது. ஆகவே இவ்வாறான செயல்கள் எமது புனிதமான இலட்சியத்தை அதன் ஊற்று மூலமான மக்கள்சக்தியை அழித்து விடுகின்றவை என்றவகையில் இவை மன்னிக்க முடியாத துரோகச் செயல்கள் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமாகிய நாம் கணிக்கின்றோம். கொள்ளைகள் மாத்திரம் நடைபெறவில்லை. அந்தக் கொள்ளைகளுக்கு சக தங்களால் இயன்ற வழிகளில் ஆதரவு தந்த பல அப்பாவிகளும் கேவலமான மிருகத்தனமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். கொள்ளையடித்தது மட்டுமல்லாமல் கொள்ளையடிக்கப்பட்ட பாவத்திற்காக தம்பொருளைப் பறிகொடுத்த ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இன்னொருவர் குற்றுயிராக மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கின்றார்.

இச்சம்பவங்கள் மக்களை எந்நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஸ்ரீலங்கா அரச யந்திரத்தைத் தகர்த்தெறிந்துவிட்டோம் என்று கூறிய நாம் அந்த அரச யந்திரம் எம்மக்களுக்கு உத்தரவாதப்படுத்திய சில விடயங்களையாவது பதிலீடு செய்துள்ளோமா? சமூக விரோதிகளுக்கு மரண தண்டனை வழங்கிய நாம் இன்று தூங்கிவிட்டோமா? அரச யந்திரத்தைத் தகர்க்க முற்படுகின்ற நாம் சமூக ஒழுங்கமைப்பையும் கபீட்சத்தையும் நீண்டகாலத்திலாவது உறுதிப்படுத்துகின்ற ஒரு பதிலீட்டைப் பொறுமையுடன் கட்டியெழுப்பவேண்டும் என்பதையே கழகம் தனது கொள்கையாக வலியுறுத்தி வந்துள்ளது இதற்குப் புறம்பான நடவடிக்கைகள் அராஜகத்திற்கு இட்டுச்செல்லும் என்பதனாலேயே அவற்றை நாம் கண்டித்தும் உள்ளோம். இன்று நடந்த கொள்ளைகளும் கொலைகளும் எமது தவறுகளையே சுட்டிக்காட்டுகின்றது. இந்நிலை மக்களை எதிரியிடம் தஞ்சம் கோரவைக்கும்.

மக்கள் சக்தியை அழித்துவிட முடியாது; மக்கள் போராட்டத்தை கொன்றுவிட முடியாது என்பதை மௌனமாக உணரும் ஸ்ரீலங்கா அரசு எம் மக்களை திசை திருப்புவதை தனது முக்கியமான தந்திரோபாயமாகக் கொண்டு சந்தர்ப்பம் பார்த்து ஆவலுடன் காத்திருக்கின்றது. ஆகவே இச்சம்பவங்கள் எம்மை வெற்றிகொள்ள சாதகமாக அமைந்துவிட்டன.

கழகம் இதுபோன்ற சம்பவங்களைத் தடுத்து நிறுத்தவும் சமூக ஒழுங்கமைப்பைப்பேணவும் தயாராகவுள்ளது. கழகம் இச்சம்பவங்களை வன்மையாக கண்டிக்கின்ற அதேவேளை வெறும் வார்த்தைகள் மூலம் கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு நாம் உண்டு நம்வேலை உண்டு என்று இருக்க விரும்பவில்லை. தமிழீழ விடுதலை சம்பந்தப்பட்டுள்ள அனைத்துப் பொறுப்புள்ள இயக்கங்களும் நடைமுறையில் இதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கழகம் வேண்டுகோள் விடுகின்றது. இதுபோன்ற சம்பவங்கள் தொடரும்பட்சத்தில் பொறுப்புணர்வுள்ள வேறு இயக்கங்கள் இதனைக் கவனிக்காதுவிடும் பட்சத்தில் கழகம் இதை ஆயுதரீதியாக' கையாளும் நிலைக்குத் தள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## நெடுந்தீவில் இளைஞர் படுகொலை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த இராஜேந்திரம் இரகு என்ற 28 வயது இளைஞர் இனந்தெரியாதவர்களால் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இளைஞர் கோஷ்டியொன்றின் தீவிரத்தேடுதல் விசாரணையின் பின் நான்குபேரைக் கைதுசெய்து மேல் விசாரணை செய்துவருகிறது.

## மல்லாகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று வித்தியாசாலை வேலியுடன் மோதியபோது இச்சிறுவன் ஸ்தலத்திலேயே பலியானார். இச்சம்பவத்தில் மல்லாகம் கலைரத்தினம் நாகராசா (45 வயது) என்பவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பொதுமக்கள் அவ்விடத்தில் பெருந்திரளாகக்கூடி வாகனத்தைப்பற்றியதுடன். வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த வீதியில் தடை ஏற்படுத்தியுள்ளனர்.

பலியான சிறுவனின் தந்தை ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தர் என்றும் 83 ஜூலை கலவரத்தின்போது மன்னாரில் பலியானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (மா)

## பட்டிருப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் தற்போது களுவாஞ்சி முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மட்டுநகர்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பளவில் துப்பாக்கிகளுடன் வந்த இரு இனந்தெரியாத இளைஞர்கள், கச்சேரி காணிப் பிரிவு பகுதியிலிருந்து இப்பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர்

விமான நிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக இப்பணம் வழங்கப்பட்டிருந்தது. (ப)


**உஷா மினி**
10-30, 2-30, 4-45, 6-45
Roger Moore as James Bond in OCTOPUSSY
திரைக்கு வராத ஜேம்ஸ் பொண்ட் சண்டைப்படம்

**சரவணபவன் மினி சினிமா**
[4 அடி அகலத்திரையில்]
10-30, 2-30, 4-30, 7-00
Private Lesson
(Part II)

**ஸ்ரான்லி மினி**
5'x5' திரையில்
10-30, 2-15
4-30, 6-45
Girl from India
ஒரு இந்தியப் பெண்ணிற்கு வெளிநாட்டில் கிடைத்த மறக்கமுடியாத சம்பவங்களைச் சித்தரிக்கும் படம்.
Adults Only

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30,
12-10-85 முதல்
மோகன். சுபாஷினி, மூர்த்தி நடித்த
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெயசித்திரா நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
புத்தம் புதிய பிரதி

**எம்பயர்**
7 அடித் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
முரளி, லட்சுமி
'ஒரு மலரின் பயணம்'
(புதிய வெளியீடு)

**மனோகரா**
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
டார்லிங் Darling டார்லிங்
பாக்கியராஜ்-பூர்ணிமா- ஜெயராம்-
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)

நியூ விக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடுகள்
1. சொன்னா நம்பமாட்டீங்க — பிரமிட் மாஸ்ரர்
சுதிர்—வனிதாஸ்ரீ
2. பட்டுச்சேலை — V. G. P; மாஸ்ரர்
(பாண்டியன்—ஜீவிதா)
நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532.

**தொழிற்சாலை விற்பனைக்கு**
நன்கு ஸ்தாபிக்கப்பட்டதும் முன்னணியில் திகழ்வதுமான இனிப்பு (டொபி) தொழிற்சாலை, வெளிநாட்டு, உள்நாட்டு இயந்திர சாதனங்களுடனும் விற்பனை வாகனங்களுடனும் நற்பெயருடனும் ட்ரேட் மார்க் உடனும் விற்பனைக்கு உண்டு
0 யாழ். நகரில் இருந்து சுமார் ஐந்துமைல் தொலைவில்.
0 100 யார் தூரத்தினுள் வங்கி, மற்றும் வசதிகள்.
0 நிதி உதவி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
0 உரிமையாளர் வெளிநாடு செல்லவிருக்கிறார்.
அக்கறையுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இலக்கம்: 207
மேற்பார்த்து: 'ஈழநாடு' லிமிட்டெட்
யாழ்ப்பாணம்.

**தொழிற் பயிற்சிகள்**
பின்வரும் பயிற்சிகளுக்கு 16-23 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து 24 10 85 ற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. விவசாயம் — ஒரு வருடம் கட்டணம் இல்லை.
2. வெல்டிங் — 4 மாதம் கட்டணம்மாதம் ரூபா 400/-
(முழுப் பயிற்சிக்கும் ரூபா 1600/ )
இப்பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யப்படுவோர் நிலையத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
தங்குமிடமும் உணவும் இலவசம்.
பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
பணிப்பாளர்,
வை. எம். சீ. ஏ.
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.
1289

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# தென்னாபிரிக்க கவிஞருக்கு மரணதண்டனை

(புதுடில்லி)

தென் ஆபிரிக்காவின் தேசிய வாதக் கவிஞர் பெஞ்சமின் மலாஜின் நேற்று தூக்கிலிடப்பட்டார். மூன்று ஆண்டுகளுக்கு முன் பொலிசார் ஒருவரைக் கொன்றதாக குற்றஞ் சாட்டப்பட்டே அவர் தூக்கிலிடப்பட்டார்.

கவிஞருக்கு மன்னிப்பு வழங்குமாறு உலகெங்கிலுமிருந்து எழுந்த வேண்டுகோள்களை வெள்ளைச் சிறுபான்மை அரசு புறக்கணித்துவிட்டு இனவெறிபிடித்த தென்னாபிரிக்க ஆட்சி மரணதண்டனையை நிறைவேற்றியுள்ளது. (ச)

# பருத்தித்துறையில் ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

## பிரஜைகள் குழு புகார்

(யாழ்ப்பாணம்)

"பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து வந்த ஆறு பேரைக்கொண்ட குழுவினர் கடந்த 10ம் திகதி மாலை பருத்தித்துறை நகரத்தில் திடீரென துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனாயினும், அப்பாவிப் பொதுமக்கள் நால்வர் படுகாயத்திற்குள்ளாகியுள்ளார்கள்" என பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், அரசாங்க அதிபர் திரு. கே. எம். பஞ்சலிங்கம் ஊடாக, இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஹமில்டன் வணசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: 'இந்தத் தேவையற்ற துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற வேளை நகரத்தில் சனசந்தடி குறைவாக இருந்தமையால் இல்லையெனில் மிக விபரீதமான நிலைமை ஏற்பட்டிருக்கும். படித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு சிறுமிகூட பலத்த துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். உடனடியாகக் கடற்கரைக்குப்போகவேண்டும் என்றும் இல்லாது சுட்டுவிடப் போவதாகவும் மிரட்டியுள்ளார்கள்.

"இச்செயல்கள் யாவும் அமைதிக்குப் பங்கமளிக்கும் செயல்களே. இவ்வாறான செயல்கள் மீண்டும் நடைபெற இடமளிக்கப்படக்கூடாது" என்று கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## ஊர்காவல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த மாநாட்டில் திருகோணமலை இணைப்பு அதிகாரி திரு. ஜே. ஜெயசூரியா மேற்கண்டவாறு கூறினார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரமுகர்கள் 'மூதூரில் 5 முஸ்லிம்கள் துப்பாக்கி சூட்டுக்கு பலியானது தொடர்பாக 'ஊர்காவல் படையில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்தனர். இதற்கு பதிலளித்தே இணைப்பதிகாரி 'ஊர்காவல் படையை தன்னால் கட்டுப்படுத்த முடியாது' என்றார்.

மூதூரில் முஸ்லிம்கள் பலியான சம்பவத்துடன், ஆயுதப்படையினரைச் சம்பந்தப்படுத்தி இந்தப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாக தெரிவித்த இணைப்பதிகாரி தான் விசாரணை செய்ததாகவும், ஆயுதப்படைக்கு சம்பந்தமில்லை என்றும் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் திருமலை அரசாங்க அதிபர் திரு. சமிலஸ் பெர்ணாண்டோ, லெப்டினன்ட் கமடோ, விமானப்படைத்தளபதி என். ஜி. குணவர்த்தன, மூதூர் பதில் நீதவான் எம். செல்வராசா, முஸ்லிம் பிரமுகர்களான ஜனாப் ரி.எம். ரஜாக் மௌலவி மசூர், ஜனாப் ஜலீல் மூதூர் உதவி அரசாங்கஅதிபர் ஜனாப் முகமட் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ய)

## சாவகச்சேரியில் மாண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதையால் சென்றன.

தென்மராட்சி மாணவர் ஒன்றியத்தினரும் நேற்று கொலைகளை எதிர்த்து மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

தென்மராட்சி மாணவர் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது இம்மறியல் போராட்டம் தமிழ்விடுதலைப் போராளிகளுக்கோ, உண்மையான விடுதலை இயக்கங்களுக்கோ, எதிரானதல்ல, மாறாக பெருகிவரும் கொலைகளையும் கொள்ளையர் கூட்டங்களையும் தடுத்து நிறுத்துவதே எமது நோக்கமாகும்.

திரம் வாய்ந்த விடுதலை இயக்கங்களே! விடுதலை என்ற பேரில் விசமத்தனமும் கொள்ளைகளும் செய்யும் இயக்கம் என்று தம்மை அழைப்பவர்களை மக்கள் முன் நிறுத்துங்கள்.

கொள்ளையடிக்கும் இயக்கங்களுடன் கூட்டுச் சேராதீர்கள். மக்களுக்கு எதிராகச் செயற்படும் இயக்கங்கள் நிச்சயம் மக்களால் தூக்கி எறியப்படும்.

மீசாலைவாழ் பொதுமக்கள் கொள்ளைகளை எதிர்த்து வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

நாடுகாக்கும் பணியில் தமது உயிரையே பயணம் வைத்து உழைக்கும் தியாக இயக்கங்களுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் இத்தகைய நிகழ்ச்சிகள் அமைந்து விடுகின்றன.

ஊரைக் கொள்ளையடித்து உல்லாசம் தேடும் இந்த வேஷக்காரர்களைக் கண்டு பிடித்து மக்கள்முன் இனங்காட்ட வேண்டியது ஒவ்வொரு தமிழீழ விடுதலைக்காகப் போராடும் இயக்கத்தினதும் தலையாய கடமையாகும்.

புத்தூர் கொலை, கொள்ளை சுழிபுரம், காரைநகர் கொள்ளை வரிசையில் இன்று மீசாலை நிகழ்ச்சியும் இடம்பெற்று விட்டது.

தமிழீழ விடுதலை மட்டுமல்ல, தனிநபர் கொள்ளைகளையும் அடக்க புனித இயக்கங்கள் முன்வரவேண்டும். (ஈ)

## நாளை பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கிராமசேவை அலுவலராக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள திரு. முருகேசு கனகநாயகத்திற்கு மாவிட்டபுரம் மக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிரிவுபசாரமளிக்கின்றனர்.

இப்பிரிவுபசாரவிழா திரு. வி. எஸ். கணேசலிங்கம் தலைமையில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நாளை பிற்பகல் நடைபெறும்.

## முல்லைத்தீவில் இருவருக்கு 'மரணதண்டனை'

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அலம்பில் கிராமத்தில் இருவருக்கு "மரணதண்டனை" வழங்கப்பட்டுள்ளது.

சச்சிதானந்தம் (30 வயது) அலம்பில்ராஜா (29 வயது) ஆகிய இருவருமே மரணமானவர்கள்.

திருமணமாகாத பெண் ஒருவரை விசாரணைக்கென்று அழைத்துச்சென்று தகாத முறையில் நடந்துகொண்டதாக இவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. குற்றம் புரிந்தபின் இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி பயமுறுத்தினார்கள் என்றும் கூறப்படுகின்றது.

"ஈரோஸ்" இயக்கம் இத்தண்டனையை நிறைவேற்றியுள்ளதாக பிரசுரங்களிலிருந்து தெரியவருகின்றது.

## அடைவு..

(1- ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் செயலகத்தில் கடமை புரியும் சகல ஊழியர்களும் உள்ளே செல்லமுடியாது திரும்பிச்சென்றனர்.

இதேபோன்று யாழ். தேர்தல் அலுவலகம், தேசிய வீடமைப்புப்பகுதி, பனம் பொருள் அபிவிருத்திச்சபை ஆகிய திணைக்களங்களும் பூட்டிய நிலையிலுள்ளதால் அவ்வூழியர்களும் வீடு திரும்பிச்சென்றனர்.

இம்மறியல் போராட்டம் இன்றுமட்டுமே செயலகத்தில் நடைபெறுமென்றும் பத்து நாட்கள் அவகாசத்தின்பின்னர் தொடர்ந்து நடைபெறும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் தெரிவித்தார். இப்போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு வழங்கினார்கள்.

இவர்களது சுலோக அட்டைகளில் பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

அரசே எமது நகைகள் உனது பணயப்பொருளா? நகைகளைத் திருப்பித்தா, அடகு வைத்தோர் சங்கம்.

எமது கோரிக்கைக்கு மௌனம்தான் பதிலா?

இரும்புக்கதவுகளைத் தகர்ப்போம். எங்கள் நகைகளை மீட்போம்,

அடகு நகைகளை மீட்கும் வரை அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதம்.

நகையும் போய் காசும் போய் காலமும் போய் இனி எம்மிடமிருந்து போவதற்கு எதுவுமில்லை.

வட்டி முதல் வாங்கிவிட்டு பொருள் வரமட்டும் தாமதமா?

## இப்படியும் ஒரு கஷ்டம்

(முல்லைத்தீவு)

ஆனையிறவு இராணுவமுகாமில் இருந்து கிளிநொச்சி பொலிஸ் நிலைய பாதுகாப்புக்குச் செல்லும் இராணுவத்தினர் பொதுமக்கள் பிரயாணம் செய்யும் பஸ்களில் ஏறி தாங்களும் செல்வதுடன் தாங்கள் கொண்டுவரும் பல்வண்டியிலும் பொதுமக்களை ஏற்றுகின்றார்கள். இதனால் பொதுமக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாவதாகக் கூறப்படுகின்றது.

## விஞ்ஞானபீட..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம் ஒன்றைநடாத்தவுள்ளார்.

இக்கூட்டத்தில் சகல பீடாதிபதிகளுடனும் உபவேந்தர் கலந்தாலோசித்து சுமுகமான முடிவு எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கொழும்பிலிருந்து நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்துள்ளதால் பீடாதிபதிகளைச் சந்திக்கமுடியாமலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள் இம்மாதம் 23ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் மகாபொல புலமைப் பரிசில் பெற கொழும்பு செல்லவேண்டியிருப்பதால் தமக்கு இம்மாதம் 30ம் திகதி நடைபெறவிருக்கும் பரீட்சையைப் பிற்போடுமாறு கேட்டிருந்தனர். அதற்கு விஞ்ஞான பீடாதிபதி பரீட்சையைப் பிற்போடுவதால் சிரமங்கள் ஏற்படும் என மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து கடந்த இரு நாட்களாக விஞ்ஞான பீடமாணவர்கள் யாழ் பல்கலைக்கழகம் முன்னிலையில் மறியல் போராட்டம் செய்தனர். இதனால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகப்பகுதி வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன. (மா)

## புத்தூரில் சமரசக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களும் அதனைத் தொடர்ந்து பாதைகள் மூடப்பட்டது குறித்தும் மூன்று பிரதான இயக்கங்களும் புத்தூர் பொதுமக்களும் கலந்து கொண்ட சமரசக் கூட்டம் நேற்று புத்தூரில் நடைபெற்றது.

இத்தகைய சம்பவங்கள் இனிமேல் நடவாதிருப்பதற்கு பூரண ஒத்துழைப்பு தருமாறு இயக்கங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவை அதனை ஏற்றுக் கொண்டன. அரசாங்கம் மேற்கொண்டு வரும் தவறான பிரசாரத்தை முறியடிக்குமுகமாகவே இந்தக் கூட்டம் நடைபெற்றது.

## திருமலையில் புதிய ராணுவமுகாம்கள்

(யாழ்ப்பாணம்)

திருமலையில் தமிழர் வெளியேறிய பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களுக்குப் பாதுகாப்பளிக்க புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன.

'ஈழம் செய்திப் பலகை'யில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திப் பலகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒட்டிசுட்டான் பொலிஸ் - இராணுவ கூட்டு முகாம் விஸ்தரிக்கப்படுகிறது பல மைல்கள் விஸ்தீரணமுள்ள மக்கள் வாழும் பகுதிகள் கைப்பற்றப்படுகிறது. 77-இல் குடியேறிய மலையக மக்கள் மீண்டும் நிலமின்றி வெளியேற்றப்படுகின்றனர்.

கொள்ளை நடவடிக்கை அதிகரிக்கின்றன. கொள்ளை நடவடிக்கைக்கு புளொட் கண்டனம்.

## மரண அறிவித்தல்

### செல்வன் சுந்தரலிங்கம் சுதர்சன்

மல்லாகம் காளிகோவிலடியைச் சேர்ந்த செல்வன் சு. சுதர்சன் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற சுந்தரம் சுந்தரலிங்கம் (நீர்ப்பாசன இலாகா-மன்னார்), சீதாதேவி சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மகனும், செல்வன் கோபிதர்சனின் அருமைச்சகோதரனும், க. கிருஷ்ணபிள்ளை (அதிபர், ரகுநாதன் தொழிற்சாலை), க. சுந்தரம் (தர்க்காம்பிளா மரக்காலை உரிமையாளர், ஆனைப்பந்தியடி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று 19-10-85 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். (1326)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சிவக்கொழுந்து

பருத்தித்துறை வியாபாரிமூலை'வன்னிக்கொத்தையை சேர்ந்த இராமலிங்கம் சிவக்கொழுந்து (கண்டி V.K.M. நாகலிங்கம் அன்சன்ஸ்) அவர்கள் 18-10-85 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் கண்ணம்மாவின் அன்புக்கணவரும், குமாரலிங்கம் (குடாவேவ-கிவோன் டுபாக்கோ கொம்பனி) அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி பாலசௌந்தரியின் அன்பு மாமனாரும், திலீபன், நிசாந்தன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பருத்தித்துறை மயானத்திற்கு ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். (1325)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கம் 63-ம் கோவில் மேற்கு வீதி, இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036 / 81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.